# தகவல் தொழில்நுட்பவியல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

## 2014–2015

### மானியக் கோரிக்கை எண்.31


**முக்கூர் என். சுப்பிரமணியன்**

தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2014

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண்.31

# கொள்கை விளக்கக் குறிப்பு 2014–2015

## பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| I. | முன்னுரை | 1–4 |
| II. | தமிழ்நாடு மின்னணு நிறுவனம் | 5–19 |
| | தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (எல்கோசெஸ்கள்) | 6–16 |
| | வன்பொருள் கொள்முதல் | 17–18 |
| | மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் | 19 |
| III. | தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு | 20–31 |
| | தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு | 21–24 |
| | தமிழ்நாடு மாநில தரவு மையம் | 25–26 |
| | கணினி சர்வர் பண்ணை | 26 |

| | | |
|---|---|---|
| | தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு | 27–28 |
| | பேரிடர் மீட்பு மையம் | 28–29 |
| | மாநில தரவு மையத்தில் மேகக் கணினிய அமைப்பு | 29–31 |
| IV. | **தமிழ்நாடு மின் ஆளுமை முகமை** | 32–62 |
| | நிறுவன வடிவமைப்பு | 33–39 |
| | மின் ஆளுமை முகமையின் பல்வேறு திட்டங்கள் | 39–52 |
| | மின் ஆளுமை திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட துறைகளுக்கு வசதி அளித்தல் | 52–62 |
| V. | **2013–2014ஆம் ஆண்டின் சிறப்பம்சங்கள்** | 63–71 |
| | அரசுத் துறைகளுக்கான "மின்ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது" | 63 |
| | மாணவர்களுக்கான "மின்ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது" | 64 |
| | அரசுத் துறைகளுக்கு வழங்கப்படும் வசதிகள் | 64 |
| | இணையதளசேவை விளக்கக் கோப்பகம் | 64–65 |
| | திட்டக் கண்காணிப்பு மென்பொருள் | 65 |
| | தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு தணிக்கை | 66 |
| | அரசு ஊழியர்களுக்கு இணையவழி பாடங்கள் | 66 |
| | மின் ஆளுமை ஊக்குவிப்பு நிதி | 67 |
| | தகவல் தொழில்நுட்பப் பணியாளர் அமைப்பு | 67 |
| | தகவல் தொடர்பு தொழில்நுட்ப மென்பொருள் களஞ்சியம் | 68 |
| | குறுந்தகவல் மூலமாக சேவை நிலை தெரிந்து கொள்ள வசதி | 68–69 |
| | திட்டத் தரவு மேலாண்மை அமைப்பு | 69 |
| | திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம் | 70–71 |
| VI. | **2013–2014ஆம் ஆண்டின் சாதனைகள்** | 72–73 |
| | eTaal | 72 |
| | மின் மாவட்டங்கள் | 73 |
| VII. | **தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம்** | 74–83 |
| VIII. | **தமிழ் இணையக் கல்விக்கழகம்** | 84–96 |
| IX. | **தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம்** | 97–109 |

# அத்தியாயம் – I

# முன்னுரை

தமிழ்நாடு, இந்தியாவின் மிகவும் முற்போக்கான மாநிலங்களுள் ஒன்றாகவும் பொருளாதார மற்றும் சமூக குறியீடுகளில் முதல் மூன்று மாநிலங்களுள் ஒன்றாகவும் திகழ்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு ஆவணம்–2023ன்படி, பல்வேறு துறைகளில் உலகத்தரம் வாய்ந்த நிறுவனங்களின் வலிமை மற்றும் சிறந்த மனித திறமையின் அடிப்படையில், தமிழகம் இந்தியாவின் கண்டுபிடிப்பு மையமாகவும் (innovation hub), அறிவு மூலதனமாகவும் (Knowledge Capital) திகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, உலகளாவிய தகவலை பெறுவதை அதிகரிக்கும் வகையில், ஒரு சிறந்த தகவல் உள்கட்டமைப்பை ஏற்படுத்தி, அதன் மூலம் வேகமான, வெளிப்படையான மற்றும் திறமையான முடிவெடுத்து, சேவை வழங்கலையும், ஆளுமையையும் மேம்படுத்துவது தற்போது இன்றியமையாததாகும். தமிழகத்தை நவீன பொருளாதார மாநிலமாக மாற்றுவதற்கு உதவும் முக்கிய காரணிகளுள் ஒன்றாக தகவல் தொழில்நுட்பம் விளங்குகிறது.



நவீன தொழில்துறையின் தேவைக்கேற்ப தமிழ்நாடு திறன்வாய்ந்த மனித வளத்தைப் பெற்றுள்ளது. வங்கியியல், நிதி சேவைகள் மற்றும் காப்பீடு (Financial Services and Insurance,BFSI) , சுகாதார திட்ட மேலாண்மை, கணினி சார்ந்த வடிவமைப்பு (Computer Aided Designing, CAD) மற்றும் கணினி சார்ந்த பொறியியல் (Computer Aided Engineering, CAE) போன்ற தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள்(ITES) துறையில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகவும், உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட மாநிலமாகவும் தமிழ்நாடு உருவாகியுள்ளது.

எனவே, தேசிய அளவில் தமிழ்நாடு முன்னணி அறிவு மாநிலங்களின் ஒன்றாகத் திகழ்கிறது.

தகவல் தொழில்நுட்பவியல் துறை 1998–ம் ஆண்டில் பின்வரும் நோக்கங்களுடன் தொடங்கப்பட்டது.

- **இணையம் வாயிலாக அரசின் தகவல் மற்றும் பரிமாற்றம் சார்ந்த சேவைகளை குடிமக்களின் இருப்பிடத்திலேயே அளித்தல்,**
- **கிராம மற்றும் நகர மக்களிடையே தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் உள்ள இடைவெளியை நிரப்புதல்,**

- **தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஆளுமையில் தமிழகத்தை சிறந்த மாநிலமாக ஆக்குதல்,**
- **தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியை கணிசமாக உயர்த்துதல்,**
- **நியாயமான கட்டணத்தில் கேபிள் டிவி சேவைகளை தமிழகத்தில் உள்ள அனைத்து இல்லங்களுக்கும் அளித்தல்,**
- **இணையம் வாயிலாக தமிழை கற்பித்தல் மற்றும் கணினித் தமிழை உயர்நிலைக்கு எடுத்துச் செல்லுதல்,**
- **குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தினை தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பம் வாயிலாக உயர்த்துதல்.**

தகவல் தொழில்நுட்ப புரட்சியை அடுத்த நிலைக்கு கொண்டு செல்லும் வகையில் மின்ஆளுமை கொள்கை (e-Governance Policy) ஒன்றும், தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பக் கொள்கை (Information and Communication Technology Policy - ICT Policy) ஒன்றும் விரைவில் வெளியிடப்படும். மேம்படுத்தப்பட்ட ஊரக வணிக வெளிப்பணிக் கொள்கை (Rural Business Process Outsourcing Policy - BPO Policy) தமிழகத்தில் வணிக வெளிப்பணி சேவை (BPO)



துறை வளர்ச்சிக்கு ஒரு உத்வேகத்தை அளித்துள்ளது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் (Information Technology / Information Technology Enabled Services) துறையில் அதிகப்படியான முதலீடுகளை ஈர்க்க தொடர்ச்சியாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிடமிருந்து **“டிஜிட்டல் அட்ரசபிள் சிஸ்டம்”** (Digital Addressable System-DAS) உரிமம் பெற தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். மத்திய அரசிடமிருந்து தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு DAS உரிமம் கிடைக்கப்பெற்றதும், சென்னை மாநகரில் டிஜிட்டல் கேபிள் டி.வி சேவை ஒளிபரப்பு, கேபிள் டி.வி. காணும் அனுபவத்தை, ஒரு புதிய நிலைக்கு கொண்டு செல்லும்.

# அத்தியாயம் – II

# தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956ன் கீழ் பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு அரசுக்கு முழுவதும் சொந்தமான ஒரு தொழில் நிறுவனமாகும். மின்னணு தொழில் துறையை முன்னேற்றும் பணிக்காக ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம், தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் கரமாக தன்னை மாற்றிக்கொண்டுள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழக அரசின் துறைகள், அரசு மற்றும் அரசுடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் மற்றும் இதர அரசு வாரியங்களுக்கும் தகவல் தொழில்நுட்பவியல், மின்ஆளுமை, இணையத்தொடர்பு மற்றும் திறன் மேம்பாடு ஆகிய பிரிவுகளில் உதவிக்கரம் நீட்டி வருகிறது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழக அரசின் வன்பொருள் கொள்முதல், மென்பொருள் தயாரிப்பு, தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறையைச் சார்ந்த மிகப்பெரிய திட்டங்கள் மற்றும் இந்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்ந்த திட்டங்களை செயல்படுத்தும் ஒரு முன்னோடி விருப்ப முகமையாக (optional



procurement agency) செயலாற்றி வருகின்றது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அமைத்து, நிர்வகித்து வரும் பொதுவான தகவல் உள்கட்டமைப்பு வசதிகளை பல துறைகள் தங்களுடைய பயன்பாட்டிற்காக பயன்படுத்தி வருகின்றன. மேலும், தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN), தமிழ்நாடு மாநில தரவு மையம் (TNSDC) போன்ற திட்டங்களை அமைத்து செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை **“எல்கோசெஸ்”** (ELCOSEZ) என்று முத்திரைப் பெயராக அறிவித்ததன் மூலம், அவற்றை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அது சார்ந்த சேவை வழங்கும் நிறுவனங்களின் முதலீடுகளுக்கான சிறந்த, உகந்த தேர்வாக உருவாக்கப் படுவதற்கு வழிசெய்யப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (எல்கோசெஸ்கள்)

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த தொழில்கள் தமிழ்நாடு முழுவதும்

பரவி வளர ஏதுவாக, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களை சென்னை மற்றும் 7 இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை (இரண்டு இடங்கள்), திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஒசூர் ஆகிய இடங்களில் அமைத்துள்ளது.

## எல்கோசெஸ்– சோழிங்கநல்லூர், சென்னை

சோழிங்கநல்லூரில் எல்கோசெஸ் 377.08 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு ரூ.194 கோடி ஆகும். இந்த எல்கோசெஸ்சில் முதன்மை வாய்ந்த தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களான திருவாளர்கள் விப்ரோ நிறுவனத்திற்கு 80 ஏக்கரும், திருவாளர்கள் எச்.சி.எல் நிறுவனத்திற்கு 50 ஏக்கரும், திருவாளர்கள் சத்யம் நிறுவனத்திற்கு 50 ஏக்கரும், திருவாளர்கள் சதர்லேண்ட் நிறுவனத்திற்கு 15 ஏக்கரும் மற்றும் திருவாளர்கள் காக்னிசன்ட் டெக்னாலஜி சொலுஷன்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 20 ஏக்கரும் முறையே குத்தகை அடிப்டையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



இந்த எல்கோசெஸ்சில் ரூ.42 கோடி முதலீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் நிறைவு பெற்றுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் 6,358 சதுரடி கொண்ட நிர்வாக கட்டிடம் ஒன்றை ரூ.126 இலட்சம் முதலீட்டில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் கட்டியுள்ளது. திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் 27 இலட்சம் சதுர அடி கட்டடத்தைக் கட்டி முடித்து, அதில் 19,000 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. திருவாளர்கள் எச்.சி.எல் நிறுவனம், 10 இலட்சம் சதுர அடி கட்டடத்தைக் கட்டி முடித்து, அதில் 10,000 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், 22 இலட்ச சதுரடியில் கட்டிட பணிகள் நடைபெற்று வருகின்றன. திருவாளர்கள் சத்யம் நிறுவனம் 6.25 இலட்சம் சதுர அடி பரப்பளவுள்ள கட்டடத்தைக் கட்டி முடித்து, அதில் 4,200 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், 2 இலட்ச சதுரடி பரப்பளவில் இதனை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், திருவாளர்கள் காக்னிசென்ட் டெக்னாலஜிஸ் சொலுசன்ஸ் நிறுவனம் 28 இலட்சம் சதுர அடி பரப்பளவுள்ள கட்டட பணிகளை தொடங்கி அந்தப் பணிகள் நடைபெற்று வருகிறது.

## எல்கோசெஸ்–விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்

இந்த எல்கோசெஸ் 62 ஏக்கர் நிலப்பரப்பில் கோயம்புத்தூர் விளாங்குறிச்சி கிராமத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு ரூ.70 கோடி ஆகும். இந்த எல்கோசெஸ்சில் பொது உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.19 கோடி முதலீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் விப்ரோ மற்றும் திருவாளர்கள் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கு தலா 9.5 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் எல்காட் நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் 3.5 இலட்ச சதுரஅடியில் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்தை கட்டி முடித்துள்ளது. திருவாளர்கள் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் 17 இலட்சம் சதுரடியில் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்தை கட்டி முடித்துள்ளது. இந்த 17 இலட்சம் சதுரஅடியில், 9.14 இலட்சம் சதுரஅடி தகவல் தொழில்நுட்பவியலுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது 5.31 இலட்சம் சதுரஅடியில் 16 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிறுவனங்கள் அமைந்துள்ளன.



## எல்கோசெஸ்–இலந்தைகுளம் மற்றும் வடபழஞ்சி, மதுரை

மதுரை மாவட்டத்தில், மதுரை வடக்கு தாலுக்காவில் உள்ள இலந்தைக்குளம் கிராமத்தில் 28.91 ஏக்கர் நிலத்தில் எல்கோசெஸ் உருவாக்க, தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்துள்ளது. மதுரை மாவட்டத்தில், மதுரை தெற்கு தாலுக்காவில் உள்ள வடபழஞ்சி கிராமத்தில், 245.17 ஏக்கர் நிலத்தில் எல்கோசெஸ் உருவாக்க, தமிழ்நாடு அரசு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்துள்ளது.

இலந்தைகுளம் எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு ரூ.34.41 கோடியாகும். பொது உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.7 கோடி முதலீட்டில் முடிக்கப்பட்டுள்ளதுடன், 50,000 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிர்வாக கட்டடம் ஒன்றும் ரூ. 17 கோடி முதலீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களான திருவாளர்கள் ஹனிவெல் டெக்னாலிஜிஸ் நிறுவனத்திற்கு 4.5 ஏக்கர் நிலத்தையும், திருவாளர்கள் செல்லா

சாப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 2.25 ஏக்கர் நிலத்தையும் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் நிர்வாக கட்டடத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களான திருவாளர்கள் கேலக்சி இன்போடெக் நிறுவனத்திற்கும், திருவாளர்கள் ஏ.எம்.பி.சி. டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் 5,785 சதுரஅடியில் இடம் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 15,181 சதுரஅடி தகவல் தொழில்நுட்பவியல் இடத்தை திருவாளர்கள் சாய் பி.பி.ஓ சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிறுவனம் விரைவில் தன்னுடைய பணியினைத் துவக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடபழஞ்சி எல்கோசெஸ்சில் பொது உட்கட்டமைப்பு வசதிகள் ரூ. 14.47 கோடி முதலீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. இந்த எல்கோசெஸ்சில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ.45 கோடியாகும். தமிழ்நாடு மின்னணு நிறுவனம், முதன்மை வாய்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களான திருவாளர்கள் எச்.சி.எல் நிறுவனத்திற்கு 60 ஏக்கரும், திருவாளர்கள் சத்யம் நிறுவனத்திற்கு 50 ஏக்கரும், திருவாளர்கள் சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு



5 ஏக்கரும், திருவாளர்கள் காலிபர் பாய்ண்ட் நிறுவனத்திற்கு 5 ஏக்கரும் மற்றும் திருவாளர்கள் ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு 2 ஏக்கரும் குத்தகை அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது.

## எல்கோசெஸ்– நாவல்பட்டு, திருச்சி

திருச்சி, நாவல்பட்டு கிராமத்தில் 147.61 ஏக்கர் நிலப்பரப்பில் எல்கோசெஸ் நிறுவப்பட்டுள்ளது. இதில் 123.23 ஏக்கர் நில பரப்பளவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டல தகுதி பெறப்பட்டுள்ளது. இங்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ. 60 கோடியாகும்.

இங்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனம், ரூ. 14.21 கோடி முதலீட்டில் பொது உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இதில் 50,000 சதுரடி கொண்ட தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிர்வாக கட்டிடம் ரூ.19 கோடி முதலீட்டில் நிறுவப்பட்டுள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :–

1. திருவாளர்கள் அசிஸ்ட் இண்டர்நேஷனல் பி.லிட். – 3 ஏக்கர்
2. திருவாளர்கள் ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பி.லிட் – 2 ஏக்கர்
3. திருவாளர்கள் ஐ.வேவ் சிஸ்டம்ஸ் டெக்னாலிஜிஸ் பி.லிட் – 5 ஏக்கர்
4. திருவாளர்கள் அன்லிமிடெட் இனொவேஷன்ஸ் இந்தியா பி.லிட் – 5 ஏக்கர்
5. திருவாளர்கள் ஜைலாக் சிஸ்டம்ஸ் லிட் – 5 ஏக்கர்
6. திருவாளர்கள் ஐ.லிங்க் மல்டி டெக் சொலுயூஸன்ஸ் பி.லிட் – 2 ஏக்கர்
7. திருவாளர்கள் டபிள்யு என்.எஸ் குளோபல் சர்வீஸஸ் பி.லிட் – 5 ஏக்கர்

இங்கு 11,200 சதுரஅடி பரப்பளவிற்கு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களான திருவாளர்கள் ஐ லிங்க் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட்., திருவாளர்கள் அசிஸ்ட் இன்பர்மேஷன் டெக்னாலஜீஸ் லிமிடெட் மற்றும் திருவாளர்கள் செவன்த் சென்ஸ் லிமிடெட் நிறுவனங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 12,950 சதுரடி இட வசதி



திருவாளர்கள் சயின்டிபிக் பப்ளிஷிங் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் விரைவில் துவங்கும் நிலையில் உள்ளது.

## எல்கோசெஸ்– கங்கைகொண்டான், திருநெல்வேலி

திருநெல்வேலி கங்கைகொண்டான் கிராமத்தில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் எல்கோசெஸ் நிறுவப்பட்டுள்ளது. இதில் 190 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டல தகுதி பெறப்பட்டுள்ளது. இங்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மொத்த முதலீடு ரூ.52.85 கோடியாகும்.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் இந்த எல்கோசெஸ்சில் 100 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு தேவையான பொது உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.13 கோடி முதலீட்டில் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம், 50,000 சதுரடி கொண்ட தகவல் தொழில் நுட்பவியல் கட்டடத்தை ரூ.16 கோடி முதலீட்டில் இங்கு நிறுவியுள்ளது.

இங்கு, சிறப்புப் பொருளாதார மண்டலப் பகுதியில், 100 ஏக்கர் நிலம் திருவாளர்கள் சின்டெல் இன்டர்நேஷனல் நிறுவனத்திற்கும், 2 ஏக்கர் நிலம் திருவாளர்கள் டெக்கான் ஐ சர்வீசஸ் நிறுவனத்திற்கும் குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், சிறப்புப் பொருளாதார மண்டலம்

அல்லாத இடத்தில் 25 ஏக்கர் நிலம் திருவாளர்கள் ஏ அன்ட் டி காஸ்மிக் பவர் நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 9,338 சதுரடி கொண்ட தகவல் தொழில்நுட்ப இடத்தை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனமான திருவாளர்கள் கோம்சாஸ் மீடியா பிரைவேட் நிறுவனத்திற்கு இட ஒதுக்கீடு செய்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

## எல்கோசெஸ்– ஜாகீர்அம்மாபாளையம், சேலம்

சேலத்தில் உள்ள ஜாகீர்அம்மாபாளையம் கிராமத்தில் 164.26 ஏக்கர் நிலப்பரப்பளவில் எல்கோசெஸ் அமைக்கப் பட்டுள்ளது. இங்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு ரூ.33 கோடியாகும். தமிழ்நாடு மின்னணு நிறுவனம், 53.33 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு தேவையான பொது உட்கட்டமைப்பு வசதிகளை ரூ.10 கோடி முதலீட்டில் ஏற்படுத்தி வருகிறது.

பின்வரும் தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களுக்கு இந்த எல்கோசெஸ்சில் குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**திருவாளர்கள்**

1. டி.பி. பிரொபஷனல் : 3 ஏக்கர்
2. வீ. டெக்னாலிஜிஸ் : 3 ஏக்கர்
3. மகிமா டெக்னாலிஜிஸ் பி. லிட் : 3 ஏக்கர்
4. ஜி.டி.பி இன்போடெக் சொலுஷன்ஸ் லிமிடெட் : 2.5 ஏக்கர்

## எல்கோசெஸ்– விஸ்வநாதபுரம், ஒசூர்

ஒசூரில் உள்ள விஸ்வநாதபுரம் கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 174.47 ஏக்கர் நிலப்பரப்பளவில் எல்கோசெஸ்சை உருவாக்கியுள்ளது. இங்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் முதலீடு ரூ.40 கோடியாகும். இங்கு ரூ.24 கோடி மதிப்பீட்டில் பொது உட்கட்டமைப்பு வசதிகள் நடைபெற்று வருகின்றன. 50,000 சதுரடியில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் நிர்வாக கட்டிட பணிகள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

பின்வரும் நிறுவனங்களுக்கு இந்த எல்கோசெஸ்சில் நிலம் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திருவாளர்கள்**

1) ஒகாயா இன்போகாம் : 10 ஏக்கர்
2) சி.ஆர்.எம். ஐ.டி.சொலுஷன்ஸ் பி. லிட். : 3 ஏக்கர்
3) சி.ஆர்.எம் இன்போடெக் இந்தியா பி.லிட். : 2 ஏக்கர்

## வன்பொருள் கொள்முதல்

அரசுத் துறைகளுக்கு தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த உற்பத்திப் பொருள்களைக் கொள்முதல் செய்யவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளை வழங்கவும், விருப்பக் கொள்முதல் முகவராக தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தை (ELCOT), தமிழக அரசு நியமித்துள்ளது. எல்காட் நிறுவனமானது தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த வன்பொருள்களான சமீபத்திய உள்ளமைப்புடன் (Configuration) கூடிய சேவை கணினிகள் (Servers), மேசைக்கணினிகள் (Desktop Computers), மடிக்கணினிகள் (Laptop Computers), ஐ–பேடுகள் (iPads), டேப்லட்கள் (Tablets), பயோமெட்ரிக் சாதனங்கள் (biometric devices), இணையநெறிமுறை சார்ந்த கண்காணிப்பு ஒளிப்படக்கருவிகள் (IP Camera Surveillance System), அச்சுப்பொறிகள் (Printers), தடையில்லா மின் வழங்கி (UPS), ஸ்கேனர்கள் (Scanners), மற்றும் அனைத்து வலையமைப்பு சார்ந்த கருவிகள் (Network Device) ஆகியவற்றையும், மென்பொருள்களையும் குறைந்தபட்ச விலையில் கொள்முதல் செய்து வருகிறது.



எல்காட் நிறுவனம், அனைத்து தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த உற்பத்திப் பொருட்களை முக்கிய அரசுத் துறைகளான வருவாய் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, வனத்துறை, நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, வேளாண் துறை, பள்ளிக் கல்வித் துறை, உயர்கல்வித் துறை, வணிகவரி மற்றும் பதிவுத் துறைகளுக்கு வழங்கி வருகிறது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், இணையநெறிமுறை சார்ந்த கண்காணிப்பு ஒளிப்படக்கருவிகளை (IP Camera Surveillance System) 575 சார்பதிவாளர் அலுவலகங்களிலும், மூன்று அரசு கண்காணிப்பு விடுதிகளிலும் வெற்றிகரமாக நிறுவியுள்ளது. கருவூலம் மற்றும் கணக்குத் துறைக்கு அவர்களது கருவூலப்பட்டியலை தானியங்கி முறையில் செயல்படுத்துவதற்கு தேவையான வன்பொருளையும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் வழங்கியுள்ளது. மேலும், 150 மேல்நிலைப்பள்ளிகளில் மின் வகுப்பறைகள் (e-smart classrooms), சென்னையில் உள்ள 200 அம்மா உணவகங்களில் இணையநெறிமுறை சார்ந்த கண்காணிப்புக் கருவிகளை நிறுவுவதற்கும் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் அமைந்துள்ள 1,000 நடுநிலைப்பள்ளிகளில் வன்பொருளை வழங்கும் பணிகளையும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

## மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

மாணவ சமுதாயம், கணினித் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ், 2011–12 ஆம் ஆண்டு 8,98,866 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை மற்றும் அறிவியல், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு வழங்கப்பட்டன. 2012–13ம் ஆண்டிற்கு, 7,30,000 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. 2013–14ம் ஆண்டில் 5,65,000 மடிக்கணினிகள் வழங்க கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது. இதுவரை 3,49,000 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. 2,16,000 மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



## அத்தியாயம் – III

## தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு

தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பானது இலக்கமுறை வலையமைப்பு செயல்படுவதற்கான ஒரு ஒருங்கிணைந்த கட்டமைப்பு ஆகும். இத்தகவல் தொழில்நுட்பக்கட்டமைப்பில் தரவு மையம், கணினி வலையமைப்பு மற்றும் தரவு தொகுப்பு மேலாண்மை சாதனங்கள் ஆகியவை அடங்கும். இந்தியாவில் முழுமையான மாநில பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் மாநில தரவு மையம் அமையப் பெற்ற சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழ்நாடு, பின்வரும் தகவல் தொழில் நுட்பவியல் உள்கட்டமைப்புகளை தன்வசம் கொண்டுள்ளது.

**1) தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பு**

அ) கிடைமட்ட இணைப்பு
ஆ) அகன்ற அலைவரிசை இணைப்பு
இ) பதிலி இணைப்பு

**2) தமிழ்நாடு மாநில தரவு மையம்**

**3) கணினி சர்வர் பண்ணை**

**4) தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு**

**5) பேரிடர் மீட்பு மையம்**

**6) மாநில தரவு மையத்தில் மேகக் கணினிய அமைப்பு**

## 1. தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பு (Tamil Nadu State Wide Area Network -TNSWAN)

தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பானது மாநில மற்றும் மத்திய அரசுகளால் ரூ.181.69 கோடி மதிப்பீட்டில் (மத்திய பங்களிப்பு ரூ.97.17 கோடி, மாநில பங்களிப்பு ரூ. 84.52 கோடி) ஏற்படுத்தப்பட்ட ஒரு பகிர்வு திட்டம் ஆகும். தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பில் 708 இருப்பு முனைகள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட்டுவரும் இந்த வலையமைப்பின் வாயிலாக அரசுத் துறைகளுக்கு குரல், தரவு, இணையம் மற்றும் வீடியோ போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வலையமைப்பு மூலம் மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கு 2 Mbps முதல் 8 Mbps வரையிலான பாதுகாப்பான இணைப்பு வழங்கப்பட்டு, இதன் மூலம் அரசு துறைகள் மாநில தரவு மையத்தில் இடம் பெற்றுள்ள கணினி சர்வர்களை அணுக ஏதுவாகிறது. இத்தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பின் BOOT (Build, Own, Operate and Transfer) செயல்பாட்டின் முதற்கட்டமானது 30.11.2012 அன்று நிறைவு பெற்றது. இரண்டாம் கட்டமாக 3 வருடத்திற்கான செயல்பாடு 09.09.2013 அன்று துவங்கப் பெற்றது.



### அ) தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பு – கிடைமட்ட இணைப்பு (TNSWAN – Horizontal Connectivity)

தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்புக்கு வெளியே அமையப்பெற்றுள்ள அரசுத் துறைகள் தங்களது பயன்பாடுகளை அளிப்பதற்கும், ஒலி, தரவு, இணையம் மற்றும் ஒளி வாயிலான கலந்துரையாடல் வசதிகளை பெறுவதற்கும் ஏதுவாக தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு இருப்பு முனைகள் வாயிலாக கிடைமட்ட இணைப்பு வழங்கப்படுகிறது.

இதுவரை கிடைமட்ட இணைப்பு வணிக வரித்துறை, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம், கருவூலம் மற்றும் கணக்கு துறை, பத்திரப் பதிவுத் துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வனத்துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, மாநில சுகாதாரக் குழுமம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நில அளவைத் துறை, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உள்ளிட்ட 1,935 அரசு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## ஆ) அகன்ற அலைவரிசை இணைப்பு (Broadband Connectivity)

தொழில்நுட்ப முன்னேற்றங்களால் உலகம் சுருக்கப்பட்ட நிலையில், தகவல் பரிமாற்றம், குறித்த நேரத்தில் நடைபெற, அகன்ற அலைவரிசையின் தேவை அதிகரித்துள்ளது. அகன்ற அலைவரிசையானது அதிவேகமாக மற்றும் கூடுதலாக தரவுகளை பரிமாறிக் கொள்ள கூடுதல் அலைவரிசைகளை வழங்குகிறது. அத்தகைய அகன்ற அலைவரிசைகளை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மிகவும் குறைந்தபட்ச விலையில் அரசு அலுவலகங்களுக்கு வழங்கி வருகிறது. இதுவரை பள்ளிகள் உட்பட சுமார் **25,000** அரசு அலுவலகங்களுக்கு அகன்ற அலைவரிசை இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

## இ) பதிலி இணைப்பு (Redundant Connectivity)

தமிழ்நாடு மாநில பெரும் பரப்பு வலையமைப்பு தலைமைச் செயலகம், ஆளுநர் மாளிகை, காவல்துறை தலைவர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம் போன்ற அரசு அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த



வலையமைப்பின் மூலம் வழங்கப்படும் குரல், தரவு மற்றும் ஒளி வாயிலான இணைப்பு மூலம் மக்களுக்கு சென்றடையக்கூடிய சேவைகள் விரைவாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் அரசு அலுவலகங்களால் வழங்க இயலுகிறது.

தமிழ்நாடு பெரும் பரப்பு வலையமைப்பின் செங்குத்து இணைப்பானது BSNL நிறுவனம் வழங்கும் அலைவரிசை வாயிலாக மாவட்டங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கப்படுகிறது. செங்குத்து இணைப்பினை (vertical connectivity) பலப்படுத்தவும், தடையற்ற இணைப்பினை மாவட்டங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களுக்கு வழங்கும் பொருட்டும், பதிலி இணைப்பாக 2 Mbps MPLS – VPN (1:1) இணைப்பு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை **78** பதிலி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் **17** இணைப்புகள் பரிசோதனையில் உள்ளன.

## 2. தமிழ்நாடு மாநில தரவு மையம் (Tamil Nadu State Data Centre- TNSDC)

தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழ் மின் ஆளுமை திட்டப் பணிகளை செயல்படுத்த முதுகெலும்பாக அமையப்பெற்ற உட்கட்டமைப்புகளுள் தமிழ்நாடு மாநில தரவு மையமும் ஒன்றாகும். இத்திட்டமானது, மாநில மற்றும் மத்திய அரசிற்கு இடையேயான ரூ.60.80 கோடி மதிப்பீட்டில் (மத்திய பங்களிப்பு ரூ.55.80 கோடி, மாநில பங்களிப்பு ரூ.5 கோடி) மத்திய அரசின் விதிமுறைகளின்படி அமையப் பெற்ற ஒரு பகிர்வு திட்டம் ஆகும். நாட்டிலேயே மாநில தரவு மையத்தின் பணிகள் மற்றும் பாதுகாப்பு மேலாண்மைக்காக ISO / IEC 20000-1:2005 மற்றும் ISO / IEC 27001:2005 சான்றிதழை பெற்ற முதல் மாநிலம் தமிழகமாகும்.

தமிழ்நாடு மாநில தரவு மையம் 24 X 7 செயல்பாடு உறுதி சேவை தர உடன்பாட்டுடன் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த பாதுகாப்பான மாநில தரவு மையத்தில் அரசுத் துறைகள் தங்கள் மின் ஆளுமை பயன்பாடுகளை ஏற்றம் செய்துக் கொள்ள இயலும். தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம், சென்னை மெட்ரோ ரயில் திட்டம்,



விலையில்லா மின் விசிறி, மின் அம்மி, மின்அரவை, விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் ERP போன்ற 15 அரசுத் துறைகளின் பயன்பாட்டு தரவுகள் ஏற்றம் செய்யப்பட்டுள்ளன. தற்போது இத்தரவு மையம் தன் முழுமையான அதிகபட்ச இடவசதி மற்றும் உட்கட்டமைப்பு கொள்ளளவில் 80 சதவீதத்தை நிறைவு செய்துள்ளது.

## 3. கணினி சர்வர் பண்ணை (Server Farm)

மாநில தரவு மையத்தில் அரசுத் துறைகள் தங்கள் பயன்பாட்டு மென்பொருளை ஏற்றம் செய்யும் பொழுது, தரவு எற்ற நடுநிலைமை, ஆன்டிவைரஸ் (Anti-Virus) மற்றும் ஃபயர்வால் போன்ற பொதுவான வசதிளை அளிப்பதற்காக, ரூ.183.17 இலட்சம் செலவில் ‘கணினி சர்வர் பண்ணை’ ஒன்று தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும், அரசுத் துறைகள் தங்கள் பயன்பாட்டு மென்பொருளை ஏற்றம் செய்வதற்கு முன், அம்மென்பொருளை, பாதிப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் மதிப்பீடு சோதனைகளுக்கு உட்படுத்த இது உதவும். அரசுத் துறைகளின் வன்பொருள், மென்பொருள் மற்றும் சோதனை கருவிகளை கொண்ட இந்த கணினி சர்வர் பண்ணையானது தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் அமைக்கப்பட்டுவருகிறது.

## 4. தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (National Knowledge Network - NKN)

தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு இந்திய அரசு மூலம் நிறுவப்பட்ட ஒரு தேசிய அளவிலான அதிவேக வலையமைப்பாகும். தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு, விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், மருத்துவர்கள், அறிஞர்கள் மற்றும் மாணவர்கள், இந்திய மற்றும் உலகளாவிய கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, மனிதவள மேம்பாட்டிற்காக செயல்படுவதற்கான ஒரு பொது தளத்தினை (common platform) வழங்குகிறது. இந்த வலையமைப்பிற்கான அலைவரிசை, அரசு நிறுவனங்களான பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட், பவர் கிரிட் கார்ப்பரேசன் ஆப் இந்தியா லிமிடெட் மற்றும் ரயில்டெல் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த வலையமைப்பு, தேசிய அளவில் தேசிய மின் ஆளுமை திட்டங்கள் செயல்படுவதற்கான தளமாக அமையப் பெற்று வருகிறது. இந்த வலையமைப்பு, வினாடிக்கு 2.5/10 Gigabits தொடங்கி, படிப்படியாக 40/100 Gigabits வரை அதிவேக இணைப்பு கொடுக்கவல்லது. இந்த 1 Gbps வேக வலையமைப்பு தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் நிறுவப்பட்டு, 200 Mbps இணைய இணைப்பு உபயோகத்தில் உள்ளது. இந்த தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு மூலம் மாநில பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் மாநில தரவு மைய பயனாளிகள் குறைந்தபட்சமாக 200 Mbps பாதுகாக்கப்பட்ட இணைய அலைவரிசையை (secured internet bandwidth) பயன்படுத்தி வருகிறார்கள். இது தற்போதைய **34** Mbps TNSWAN இணைய அலைவரிசை மற்றும் **32** Mbps TNSDC அலைவரிசையை விட கூடுதலாகும். இந்த இணைப்பு மூலம், தேசிய அளவில் ஏற்றம் செய்யப்பட்டுள்ள பயன்பாடுகளை (applications) அதிவேகமாக அணுக இயலும். இந்த தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (National Knowledge Network) மூலம் ஏற்கனவே இருந்ததை விட பலமடங்கு அதிகமான வேகத்தில் பயன்பாடுகளை அணுக இயலும்.

## 5. பேரிடர் மீட்பு மையம் (Disaster Recovery Centre – DRC)

தமிழ்நாடு மாநில தரவு மையம், அரசு துறைகள் தங்கள் பயன்பாடுகளை ஒரு பொதுவான, மேம்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கட்டமைப்பில் ஏற்றம் செய்து ஒருங்கிணைப்பு மற்றும் வள ஆதாரத்தை நடைமுறைப்படுத்த உதவிகரமாக உள்ளது. எனினும் சுனாமி, பூகம்பம், வெள்ளம் போன்ற இயற்கை தொடர்பான பேரழிவுகள்

மாநில தரவு மையங்களின் பாதுகாப்பிற்கு சவாலாக உள்ளது. எனவே அரசுத் துறைகளின் மின்சேவைகள் தடையின்றி தொர்டர்ச்சியாக நடைபெற ஒரு பேரிடர் மீட்பு மையம் (Disaster Recovery Centre) அமைப்பது அத்தியாவசியமாகிறது. பேரிடர் மீட்பு மையம் அமைக்கும் பணிக்கான செயலாக்க முகமையாக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இப்பணியை பல கட்டங்களாக செயல்படுத்துவதற்காக ஒப்பந்தப் புள்ளி மூலம் ஆலோசக நிறுவனம் (Consultant) ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## 6. மாநில தரவு மையத்தில் மேகக் கணினிய அமைப்பு (Cloud Computing Setup at TNSDC)

தமிழ்நாடு மாநில தரவு மையம், அரசுத் துறைகளுக்கு தடையற்ற, மிகவும் நம்பகமான / வலுவான பகிர்வு மற்றும் பாதுகாக்கப்பட்ட, மேம்படுத்தக்கூடிய உட்கட்டமைப்பினை வழங்கும் வகையில் அமைந்துள்ளது. கணினி உட்கட்டமைப்பினை சிறந்த மற்றும் உகந்த முறையில் பயன்படுத்துவதற்கும், ஒரே உட்கட்டமைப்பினை பல்வேறு பயன்பாடுகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும் தரவு மையத்தில் மேகக் கணினிய அமைப்பு அத்தியாவசியமாகிறது.



மேலும், இந்த மேகக் கணினிய தொழில்நுட்பத்தால் தொழில்நுட்ப வளங்களின் தொகுப்பு (consolidation of IT resources) ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் மின்சக்தி சேமிப்பு ஏற்படும். இது பசுமை தொழில்நுட்பத்திற்கு வழி வகுக்கும்.

மாநில தரவு மையத்தில் மேக கணினி வாயிலாக சேவை விநியோகம் (service delivery) ஏற்படுத்தப்பட உள்ளது. தகவல் தொழில்நுட்ப வளங்களின் சிறப்பான பயன்பாடு, மாற்றக்கூடிய அளவீடு மற்றும் தரவின் பேரிடர் மீட்பு ஆகியவற்றுக்கான தீர்வாக மேகக்கணினியம் அமையும். இந்த மேகக் கணினிய அமைப்பு அரசிற்கு வன்பொருள், மென்பொருள் மற்றும் பராமரிப்புக்கான செலவினங்களை குறைக்க வழிவகுக்கும். அரசுத் துறைகள் தங்கள் சேவைகளை வலைதளம் மூலம் நேரடியாக வழங்க, தரவு மையத்தில் அமையப் பெறும் மேகக் கணினிய அமைப்பு உதவும். இந்த மேகக் கணினிய அமைப்பானது (அ) உள்கட்டமைப்பு சேவை (ஆ) பயன்பாட்டு தள சேவை (இ) மென்பொருள் சேவை ஆகியவற்றை வழங்குவதற்கான ஒரு தீர்வாகும். இதன் தொடக்கமாக, மாநில தரவு மையத்தில் அமையப்பெற்ற உள்கட்டமைப்பு வசதிகளை கொண்டு C-DAC நிறுவனத்தின் மூலம் மேகக் கணினியம் நிறுவப்பட்டுள்ளது. இந்த மேகக் கணினியத்தில் புடவை மற்றும் வேட்டி வழங்கும் திட்டத்திற்கான

தரவு ஏற்றம் செய்யப்பட்டு, அது பொது பயன்பாட்டில் உள்ளது. மேலும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் ERP - FMS **04.02.2014** அன்று கருத்து சான்று முறையில் ஏற்றம் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.



# அத்தியாயம் – IV

# தமிழ்நாடு மின் ஆளுமை முகமை

## மாண்புமிகு முதலமைச்சரின் தொலை நோக்கு பார்வை – தமிழ்நாடு தொலை நோக்கு பார்வை 2023

> **"தமிழ்நாடு, பொறுப்பான மற்றும் வெளிப்படையான ஆளுமையால் முன்னேற்றம், பாதுகாப்பு மற்றும் அனைத்து தரப்பு மக்களுக்கும் சம வாய்ப்பு என்ற போற்றத்தக்க ஒரு கலாச்சாரத்தை எட்டும்."**

## 1. முன்னுரை

தமிழ்நாடு அரசின் அனைத்து மின் ஆளுமை முயற்சிகளையும் செயல்படுத்தும் முகமையாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு மின் ஆளுமை திட்டங்கள் பொது மக்களுக்கு நேர்த்தியாகவும், வெளிப்படையாகவும் கிடைக்கப்பெற வேண்டுமென்ற குறிக்கோளுடன் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை இத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மின் மாவட்டம், கிராம


மற்றும் நகர்புறங்களில் பொது சேவை மையங்கள், தகவல் தொழில்நுட்ப தொடர்பு மற்றும் அதை சார்ந்த உபகரணங்களின் (ICT) திறன் மேம்பாடு (Capacity building), புவி சார் தகவல் அமைப்பு (GIS), மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (SRDH), மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் (SSDG) ஆகிய முக்கியமான திட்டங்களை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்கு பார்வையினை நிறைவு செய்யும் பொருட்டு, தகவல் தொழில் நுட்பம் வாயிலாக பொது மக்களுக்கு அவர் தம் இருப்பிடத்திலேயே சேவைகளை வழங்குவதை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

## 2) நிறுவன வடிவமைப்பு

மாநில அளவிலான மின் ஆளுமை நடவடிக்கைக்கான நிறுவன வடிவமைப்பு பின்வருமாறு :






உயர்மட்டக் குழு (தமிழ்நாடு மின் ஆளுமை முகமை)
படம் – 1

## 2.1. மாநில உயர்மட்ட குழு

தேசிய மின்ஆளுமை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் மின் ஆளுமை திட்டங்கள் அனைத்தும் தலைமைச் செயலாளரை தலைவராக கொண்டு உருவாக்கப்பட்ட உயர்மட்ட குழுவால் வழிநடத்தப்பட்டு வருகிறது. இக்குழு மாநில மின் ஆளுமை முயற்சிகள் மற்றும் குறிக்கோள் திட்டங்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதுடன், துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பினை உறுதிசெய்கிறது. மின்ஆளுமை முயற்சிகளின் திட்ட மேலாண்மை மூலமாக தரப்படுத்தல் மற்றும்

நிலைத்தன்மையை மாநில மின் ஆளுமைக் குழுவின் உதவியுடன் வழங்கிவருகிறது.

## 2.2. தமிழ்நாடு மின் ஆளுமை முகமை குழு

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை 11 குறிக்கோள் துறைகளின் செயலாளர்களை உள்ளடக்கியது. இக்குழு அண்மையில் மாற்றியமைக்கப்பட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் மின் ஆளுமை முயற்சிகளுக்கும், குடிமக்களுக்கான சேவை வழங்குவதற்கும் வழிகாட்டுகிறது.


## 2.3 மின் ஆளுமை இயக்ககம்

மின் ஆளுமை இயக்ககம் (Directorate of e-Governace) மின் ஆளுமை முயற்சிகள் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பத் திட்டங்களை மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தவும் மின் ஆளுமை முகமையுடன் இணைந்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கெனவும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சார்ந்த திட்டங்கள் பல்வேறு துறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், வழிகாட்டுதல், தரப்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு சூழலை உருவாக்குதல் ஆகியவற்றிற்கு ஒருங்கிணைப்புத் துறை /



முகமையாக செயல்படும் நிறுவனங்களை வலுப்படுத்துதல் அவசியமாகிறது. இதனை பூர்த்தி செய்யும் வகையில், அரசு 2 இணை இயக்குநர்கள் (தொழில்நுட்பம்), 5 முதுநிலை கணினி பகுப்பாய்வாளர்கள் / முதுநிலை கணினி பொறியாளர்கள், 15 கணினி பகுப்பாய்வாளர்கள் / கணினி பொறியாளர்கள், 60 உதவி கணினி பகுப்பாய்வாளர்கள் / உதவி கணினி பொறியாளர்கள் கொண்ட தொழில்நுட்ப பிரிவையும், ஒரு துணை இயக்குநர், ஒரு முதன்மை கணக்கு அலுவலர், 2 உதவியாளர், 2 இளநிலை உதவியாளர், ஒரு அலுவலக உதவியாளர் கொண்ட நிர்வாக பிரிவும் கொண்ட தகவல் தொழில்நுட்ப பணியாளர் தொகுப்பு (IT Cadre) உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தொழில்நுட்ப பிரிவிற்கு ஊட்டுப்பதவியாக (feeder category) உதவி கணினி பகுப்பாய்வாளர்கள் / உதவி கணினி பொறியாளர்கள் பணியிடங்கள் அமையும். பின்வரும் விளக்கப்படம் மின் ஆளுமை இயக்ககம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் நிறுவன அமைப்பினை விளக்குகிறது :




படம் – 2

## 2.4 மாநில மின் குறிக்கோள் குழு (SeMT)

மாநில மின் குறிக்கோள் குழு (State e-Governance Mission Team) ஒன்று தகவல் தொழில் நுட்பவியல் துறையின் கீழ் இயங்கிவரும் தமிழ்நாடு மின்ஆளுமை முகமையில்



செயல்பட்டு வருகிறது. இக்குழுவில் திட்ட மேலாண்மை, தொழில்நுட்ப மேலாண்மை, நிதி மேலாண்மை மற்றும் மாற்ற மேலாண்மை தொடர்புடைய தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்கள் உள்ளனர். மாநில மின் குறிக்கோள் குழுவின் ஆலோசகர்கள் தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் மின் ஆளுமை திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் அரசுத் துறைகளுக்கு உதவிக்கரம் நீட்டி வருகின்றனர். இந்த ஆலோசகர்கள், மாநில அரசுத் துறைகளுக்கு ஒரு ஆலோசனைக் குழுவாக செயல்பட்டு உதவிவருவதுடன், துறை சார்ந்த தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப திட்டமிடலையும் (ICT Road map), விழிப்புணர்வினையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

## 2.5 மாவட்ட மின் ஆளுமை சங்கம் (DeGS)

அனைத்து மாவட்டங்களிலும் மின்ஆளுமை திட்டங்களை செயல்படுத்திட மின் ஆளுமை சங்கங்களை (District e-Governance Societies) அமைத்திட வேண்டுமென அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி, அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மின் ஆளுமைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்ட மின் ஆளுமைச் சங்கமும் சென்னை தவிர அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் இயங்கி வருகிறது.

சென்னையைப் பொறுத்தவரை, இச்சங்கம், சென்னை மாநகராட்சி ஆணையர் தலைமையில் இயங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சேவைகளை வழங்கும் துறை சார்ந்த அதிகாரிகள் அனைவரும் இச்சங்கத்தின் உறுப்பினராவர். மாவட்ட அளவில், தகவல் தொடர்பு தொழில் நுட்பம் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு மாவட்ட மின் ஆளுமை சங்கத்தினை சார்ந்ததாகும். மாவட்ட அளவில் செயல்படுத்தப்பட்ட மின் ஆளுமை திட்டங்கள் மற்றும் அதன் செயல்பாடுகளை மேற்கொள்வதில் மாவட்ட மின் ஆளுமைச் சங்கம் முக்கிய பங்கு வகிக்கும்.

மின் ஆளுமை சங்கங்கள் **(DeGS)** நன்முறையில் இயங்கிட ஏதுவாக அரசால் தலா ரூபாய் பத்து லட்சம் வீதம் ஆதார நிதி உதவியாக **(as seed money assistance)** ஒவ்வொரு சங்கத்திற்கும் வழங்கப்பட்டு வருகிறது.

## 3. மின் ஆளுமை முகமையின் பல்வேறு திட்டங்கள் (Projects, Programmes and Schemes)

### 3.1. மின் மாவட்டத் திட்டம் (e-District Programme)

மின் மாவட்டத் திட்டம், தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் செயல்பட்டுவரும் ஒரு மாநில குறிக்கோள் திட்டமாகும். இத்திட்டத்தின் குறிக்கோள், தமிழ்நாடு



பெரும்பரப்பு வலையமைப்பு, மாநில தரவு மையம், மாநில இணையதளம் மற்றும் மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் **(SWAN, SDC, and SSDG)** போன்ற உட்கட்டமைப்புகளைக் கொண்டு, பொதுச் சேவை மையங்கள், வசதி மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் வாயிலாக பொது மக்களுக்கு மின் சேவைகளை வழங்குவதாகும். முன்னோடி மின் மாவட்டத் திட்டத்தினைச் செயலாக்கம் செய்திடத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் முன்னோடி மின் மாவட்டங்களாக முறையே அரியலூர், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், நீலகிரி மற்றும் திருவாரூர் ஆகிய **6** மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. தமிழ்நாட்டிலுள்ள உள்ள **32** மாவட்டங்களிலும் மின் மாவட்ட சேவைகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளன.

தற்போது, மின் மாவட்டத் திட்டத்தின்படி, பின்வரும் **19** வகையான சேவைகள் மாநில இணையதளம் மற்றும் மாநில சேவைகள் விநியோக நுழைவாயிலின் வழியாக வழங்கப்பட்டு வருகின்றன :

| சேவைகள் விவரம் | அரசுத்துறைகள் | வழங்கப்படும் சேவைகளின் பெயர் |
|---|---|---|
| சான்றிதழ்கள் | வருவாய்த் துறை | 1. வருமானச் சான்றிதழ்<br>2. பிறப்பிடச் சான்றிதழ்<br>3. சாதிச் சான்றிதழ்<br>4. குடும்பத்தில் பட்டதாரி இல்லை என்பதற்கான சான்றிதழ்<br>5. கணவனால் கைவிடப்பட்டவர் என்ற சான்றிதழ் |
| சமூக நலத் திட்டங்கள் | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 6. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி திட்டம்<br>7. அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்<br>8. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம்<br>9. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் |



| | | |
|---|---|---|
| | | 10. டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம்<br>11. முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் I & II |

(பட்டியல் – 1)

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைகளின் கல்வி உதவித் தொகைக்கான பின்வரும் திட்டங்கள், மின்மாவட்ட இணையதள வாயிலாக, தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் உள்ள தொடர்புடைய கல்லூரிகள் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன :

| சேவைகள் விவரம் | அரசுத்துறைகள் | வழங்கப்படும் சேவைகளின் பெயர் |
|---|---|---|
| கல்வி உதவித் தொகை | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 12. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பிற்கு, மைய அரசின் கல்வி உதவித் திட்டம். |

| | | |
|---|---|---|
| | | 13. பழங்குடியின மாணவர்களுக்கான பள்ளி மேற்படிப்பிற்கு, மைய அரசின் கல்வி உதவித் திட்டம்.<br>14. பள்ளி மேற்படிப்பிற்கான மாநில அரசின் சிறப்புக் கல்வி உதவித் திட்டம்.<br>15. மேற்படிப்பிற்கான சிறப்பு கல்வி உதவித் திட்டம். |
| கல்வி உதவித் தொகை | பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 16. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் திட்டங்கள்.<br>17. தொழிற் கல்வி மாணவர்களுக்கு நிதியுதவித் திட்டம்.<br>18. பட்டப்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம்.<br>19. பட்டயப்படிப்பிற்கான நிதியுதவித் திட்டம். |

(பட்டியல் – 2)



தமிழகத்திலுள்ள 32 மாவட்டங்களில், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், அரியலூர், திருவண்ணாமலை, கன்னியாகுமரி தூத்துக்குடி மற்றும் நீலகிரி ஆகிய 7 மாவட்டங்களில் மின்மாவட்டத் திட்டத்தின் அனைத்து சேவைகளும் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கூறப்பட்டுள்ள சேவைகளைத் தவிர, இத்தகைய பிற கூடுதல் சேவைகளை வழங்கிட ஏதுவான மேலும் சில துறைகள் கண்டறியப்பட்டு, அவற்றிற்கும் மின்மாவட்ட இணையதளம் (e-District Portal) வழியாக சேவைகளை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 3.2 பொதுச் சேவை மையங்கள் (Common Service Centres)

பொது மக்களுக்கு வழங்கவேண்டிய அடிப்படைத் தேவைகளை நன்குணர்ந்துள்ள அரசு, அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையிலேயே பொதுச் சேவை மையங்கள் வழியாக தேவையான அரசு சேவைகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி, தற்போது பொதுச் சேவை மையங்கள், மின் மாவட்ட சேவைகளையும் மற்றும் இதர தனியார் சேவைகளையும் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன.

தற்போது, பொதுச் சேவை மையங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் அடங்கிய 1,572 மையங்கள், மின்னணுசேவைகளை வழங்கி வருகின்றன. மேலும் கூடுதலாக 2,280 பொதுச் சேவை மையங்களை அமைத்திட திட்டமிடப்பட்டு, அவற்றில் 18 மாவட்டங்களில் சுமார் 1,930 பொதுச் சேவை மையங்கள் அமைக்கக் கடிதவழி ஒப்புதல் (Letter of Acceptance - LoA) வழங்கப்பட்டுள்ளது.

## 3.3 நகர்ப்புற அரசு பொதுச் சேவை மையங்கள் (Urban Arasu Common Service Centres)

கிராமப்புற பொதுசேவை மையங்களின் பயன்பாடுகளைக் கருத்திற்கொண்டு, இத்திட்டம் நகர்ப்புறப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தின் வெவ்வேறு அரசுத் துறைகளின் மின்னணு சேவைகளை ஒருங்கிணைந்த முறையில், நகர்ப்புறப் பகுதிகளில் ஒரு பொதுவான இடத்தில் வழங்கும் நோக்கில் நகர்ப்புற அரசு பொது சேவை மையங்கள் செயல்படும்.

நகர்ப்புற அரசு பொதுச் சேவை மையங்களை அமைப்பதற்கான முன்னோடித் திட்டம் கடந்த 24–02–2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பின்வரும் 14 இடங்களில் துவக்கி வைக்கப்பட்டது :



| | |
|---|---|
| வட்டாட்சியர் அலுவலகங்கள் | – 3 |
| சென்னை மாநகராட்சி (மண்டல அலுவலகங்கள்) | – 3 |
| சென்னைப் பெருநகர குடிநீர்வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் (CMWSSB Depots) | – 2 |
| நகர்ப்புற கூட்டுறவு கடன் வழங்கு சங்கங்கள் | – 6 |

இதன் இரண்டாவது கட்டமாக மாநிலத்தில் உள்ள அனைத்து நகர்ப்புறப் பகுதிகளில் மேலும் 300 நகர்ப்புற அரசு பொதுச் சேவை மையங்களை அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

## 3.4. மாநில சேவை இணையதளம், மாநில சேவைகள் விநியோக நுழைவாயில் (State Portal, State Services Delivery Gateway)

தமிழ்நாடு அரசின் சேவைகள் மற்றும் தகவல்கள் ஆகியவற்றை எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் பெறக்கூடிய ஒரே முகப்பாக மாநில சேவை இணைய தளம் இருக்கிறது. மின்மாவட்ட சேவைகளின் ஒருங்கிணைப்பு, பொருண்மை நிர்வாக அமைப்பு, துறைகளின் சேவைகளுக்கான இணைப்புகள், கைபேசி இணக்கமுறை, பொதுமக்களால் செய்யப்படும் பதிவுகள் ஆகியவற்றை மாநில சேவை இணைய தளம் உள்ளடக்கியிருக்கும். இச்சேவை இணைய தளம்

வடிவமைக்கப்பட்டு, மாநில தரக்கட்டுப்பாட்டு (STQC) நிறுவனத்தால் அதன் செயல்பாடு, திறன் மற்றும் பாதுகாப்பு குறித்து முழுமையாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, கடந்த 24.02.2014 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

## 3.5 திறன் மேம்பாடு (Capacity Building)

திறன் மேம்பாட்டுத் திட்டம், அரசின் பல்வேறு நிலைகளில் தகவல் தொழில்நுட்பத் திறனில் நிபுணத்துவம் அடைய, திறமைகளை உயர்த்திட பின்வருவனவற்றை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டதாகும் :

1. பல்வேறு மின் ஆளுமை முயற்சிகளில் தரம் மற்றும் சீரான நிலையை ஏற்படுத்துதல்.
2. திட்ட மாற்றம் மற்றும் பயிற்சிக்கான தேவைகள்.
3. அரசு திட்டமிடுதலில் மாற்றம் ஏற்படுத்துதல்.
4. செலவினம் மற்றும் மனிதவள மேம்பாட்டினை திறமையுடன் கையாளுதல்.
5. வெளிச் சந்தையிலுள்ள வளத்தினை திறம்படப் பெற்றிடல்.
6. பிற இடங்களில் பயன்படுத்தப்படும் சிறப்பு அம்சங்களை நடைமுறைப்படுத்தல்.




மேற்கண்ட திறன் மேம்பாடு முறைகள் தவிர, பின்வரும் பல்வேறு பாடத் திட்டங்கள் மற்றும் பயிற்சிகள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால், அரசுத் துறைப் பணியாளர்களின் நலனுக்கென நடத்தப்படுகின்றன :

1. அடிப்படை தகவல் தொழில்நுட்ப புத்தாக்க பயிற்சி
2. மின் மாவட்டம் மென்பொருள் பயிற்சி
3. மின் ஆளுமை புத்தாக்க பயிற்சி
4. மின் ஆளுமைத் திட்ட சிறப்பு நிலைப் பயிற்சி **(STeP)**
5. மென் திறன் பயிற்சி
6. வன்பொருள் மற்றும் வலையமைப்பு பாடத் திட்டம்
7. தரவு தொகுப்பு மேலாண்மை பாடத் திட்டம்
8. ஐ.பி.வி. 6 பயிற்சி
9. மாற்ற மேலாண்மை பயிற்சி
10. அரசு சேவை வழங்குதலில் மாற்றம் செய்வதற்கான பயிற்சி
11. திட்ட மேலாண்மை பாடத் திட்டம்
12. மென்பொருள் உருவாக்கும் பயிற்சி.

இதுவரை, 34,244 அரசுப் பணியாளர்களுக்கு வெவ்வேறு வகையான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. பின்வரும் விளக்கப்படம் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் கடந்த

2009 முதல் மே 2014 வரையில் நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களை விளக்குகிறது.

**அளிக்கப்பட்ட பயிற்சிகள்**
**(2009 முதல் மே 2014 வரை)**




படம் – 3

**2013–14** ஆம் ஆண்டில் **2,566** அரசு அலுவலர்களுக்கு மின்மாவட்ட மென்பொருள் உருவாக்கப் பயிற்சியும், **65** அலுவலர்களுக்கு IPv6–விழிப்புணர்வு சிறப்புப் பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.



மேற்கண்ட பயிற்சிகள் தவிர, தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின்கீழ் மாநில அளவிலான விழிப்புணர்வு முகாம் ஒன்று கடந்த **27.08.2013** அன்று நடத்தப்பட்டு, அதில் **135** அலுவலர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## 3.6 தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு

ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பினை (Integrated TNGIS) ஏற்படுத்திட ஏதுவாக ரூபாய் **1,32,80,000/–** ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தரப்படுத்தப்பட்ட புவிசார் மென்பொருள் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த வரைபடங்கள், மாநில மற்றும் மாவட்ட அளவிலான நிலையான ஒரு புவிசார் தகவல் அமைப்பாக **(GIS)** இருக்கும். தரப்படுத்தப்பட்ட புவிசார் மென்பொருட்களை பயன்படுத்த ஏதுவாக, தமிழ்நாடு சாலைப்பணித் திட்டத் துறையினால் (Tamil Nadu Road Sector Project) கொள்முதல் செய்யப்பட்ட வரைபடங்கள் அடிப்படை வரைபடங்களாக உபயோகப்படுத்தப்படும். இவ்வரைபடத் தொகுப்பு, அரசின் பிற துறைகளுக்கிடையில் பகிர்ந்து கொள்ளப்படும்.

## 3.7 மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையம் (STATE RESIDENT DATA HUB)

தமிழ்நாட்டில் மாநில குடியிருப்போர் தகவல் தொகுப்பு மையத்தினை நிறுவிட அரசு ஆணையிட்டுள்ளது. இம்மையத்தில் தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் மூலம் குடிமக்களின் (பயோமெட்ரி) தரவுத் தளத்தை உருவாக்கி, அதனை மைய அரசின் UIDAI நிறுவன ஆதார் எண்ணின் மூலம் சரிபார்க்கப்படும்.

இத்தகவல் தொகுப்பு மையத்தின் தரவுதளத்தினை அரசுத்துறைகள்/ முகமைகள் / பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவை ஆதார் எண்களை பயன்படுத்தவும், தூய்மைப்படுத்தவும், நகல்களை அழிக்கவும், தரவுகளை திறமையான முறையில் ஒழுங்குபடுத்தவும் பயன்படும்.

மாநில குடியிருப்போர் தகவல் மையம், மாநில அரசுக்கு பின்வரும் வகையில் உதவிபுரியும் :

- மாநில அளவிலான குடிமக்கள் தரவுகளை மின்னாக்கம் செய்து, மையப்படுத்தப்பட்ட, பாதுகாப்பான முறையில் நிர்வகித்தல்;
- ஆதார் எண்ணைப் பயன்படுத்தி, மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட பயனாளிகளை தனித்தனியாக கண்டறிதல்;
- அரசுத்துறைகளின் தரவுத்தளங்களை ஆதார் எண் சார்ந்த தேசிய மக்கள் தொகை பதிவேட்டினை நிகழ்நேரத்தில் ஒருங்கிணைத்தல்;



- பல்வேறு பயன்பாடுகளில் ஆதார் சான்றளிப்பினை இணைத்தல்;

மாநில தரவு மையத்தில் மாநில குடியிருப்போர் தகவல் மைய மென்பொருள் வடிவமைப்பினை பயன்படுத்தி, ஆதார் தரவுகளை சான்றளிக்கும் ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படும்.

இத்திட்டம் ரூ.25.93 கோடி செலவில் நிறைவேற்றப்படும்.

## 3.8 மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட துறைகளுக்கு வசதி அளித்தல்

கடந்த சில ஆண்டுகளாக அரசுத் துறைகள் மின்ஆளுமைத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. குடிமக்களுக்கு சேவைகளை வழங்குவதற்கு 15 அரசுத் துறைகளின் சேவைகளை முதன்மைப்படுத்தி, மாநில மின் குறிக்கோள் துறைகளாக தமிழக அரசு தெரிவு செய்துள்ளது. இத்துறைகளுக்கு தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் பொது சேவை மையங்கள் ஆகிய கட்டமைப்பு வசதிகளை அளித்து, அவற்றின் மூலமாக மின்னணு வழி சேவைகளை வழங்க தகவல் தொழில்நுட்பவியல் துறை உறுதுணையாக உள்ளது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை ஆகிய நிறுவனங்கள் இந்த மின்னாளுமை திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட மின்குறிக்கோள்

துறைகளுக்கு தொழில்நுட்ப வழிகாட்டுதலையும், திட்ட செயல்பாட்டிற்கான உதவியையும் வழங்கி வருகின்றன. இந்த மின்னாளுமைத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட மின்குறிக்கோள் துறைகளால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் பின்வருமாறு :–

| வ.எண். | திட்டங்கள் | தற்போதைய நிலை |
|---|---|---|
| 1. | வேளாண்மை (AGRISNET) | • பண்ணை பயிர் மேம்பாட்டுத் திட்டம் (FCMS) செயல் படுத்தப்பட்டு வருகிறது. இது செயல்பாடு, பராமரிப்பு மற்றும் மேம்படுத்தும் கட்டத்தில் உள்ளது.<br>• உர விநியோகம், பூச்சிக் கொல்லிகள், விதைகள் மற்றும் விவசாய கருவிகள் ஆகியவற்றின் விற்பனைக்கான இணையவழி விலைப்பட்டியல் வட்டார அளவில் செயல்படுத்துதல். (சென்னை தலைமை இடத்தில் பயனாளிகளின் நிகழ் நேரடி கண்காணிப்பு) |
| 2. | மின் மாவட்டம் | • இத்திட்டத்தின்கீழ் கண்டறியப் பட்ட 37 சேவைகளில், 19 சேவைகள் உருவாக்கப்பட்டு தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் வழங்கப் படுகின்றன (5 வருவாய் துறை சான்றிதழ்கள் மற்றும் 6 சமூக நல திட்டங்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் சிறுபான்மையினர், சீர்மரபினர் நலத்துறையின் 8 கல்வி உதவித்திட்ட சேவைகள்). |
| 3. | வேலைவாய்ப்பு (tnvelaivaippu) | • இணையவழி வேலைவாய்ப்பு சேவை தளம் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள 48 வேலைவாய்ப்புஅலுவலகங்கள் தானியக்க முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.<br>• 7 இலட்சத்திற்கும் மேற்பட்ட 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின் தகவல் தொகுப்பு தரவு இறக்கம் செய்யப்பட்டு, 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியிட்ட பின்பு ‘‘தமிழ்நாடு வேலைவாய்ப்பு தரவு தளத்துடன்’’ ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. |
| 4. | நில ஆவணங்கள் (NLRMP) | • காஞ்சிபுரம் மாவட்டத்தில் 6 வட்டங்களிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் 5 வட்டங்களிலும் நில ஆவண மேலாண்மை மையங்கள் |

| | | |
|---|---|---|
| | | ஏற்படுத்தும் பணிகள் முடிவடைந்துள்ளன. இந்த 11 மையங்களுக்கும் தேவையான கணினி மற்றும் கணினி சார்ந்த உபகரணங்கள், மரச்சாமான்கள் போன்றவை வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>• மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 4 வட்டங்களில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.<br>• காஞ்சிபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் மீதமுள்ள வட்டங்கள் மற்றும் மாநிலத்தில் உள்ள மற்ற 57 வட்டங்களிலும் நில ஆவண மேலாண்மை மையங்கள் (LRMCs) அமைக்கும் பணிக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.<br>• 1.35 கோடி நத்தம் நில ஆவணங்கள் மற்றும் 37 இலட்சம் நகர்ப்புற நில ஆவணங்கள் தொடர்பான தரவு உள்ளீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. |



| | | |
|---|---|---|
| | | • அனைத்து நவீன வசதிகள் மற்றும் உபகரணங்களுடன் கூடிய தேசிய நில ஆவணங்கள் நவீனப்படுத்தும் திட்டத்திற்கான பயிற்சி அறை, ஒரத்தநாட்டில் உள்ள நில அளவை பயிற்சி மையத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. |
| 5. | வணிகவரித் துறைக்கான முழுமையான தீர்வு | • வணிக வரித்துறையில் முழுமையான மென்பொருள் சார்ந்த தீர்வு ஒன்றினை நடைமுறைப்படுத்துவதற்கு ஆலோசனை முகமையும், அமைப்பு ஒருங்கிணைப் பாளரும் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.<br>• மென்பொருட்கள் உருவாக்கம் செயல்படுத்தப்பட உள்ளது. |
| 6. | நகராட்சிகள் | • நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக மைய மின்ஆளுமை பயன்பாட்டு மென்பொருள் ஒன்று உருவாக்கப்படும்.<br>• அமைப்பு ஒருங்கிணைப்பாளர் கண்டறியப்பட்டுள்ளார். முன்மாதிரி (Prototype) உருவாக்கத்தில் உள்ளது. |

| | | |
|---|---|---|
| **7.** | ஊராட்சிகள் (மின்–ஊராட்சி) | • டெல்லி தேசிய தகவலியல் மையம் **14** பயன்பாட்டு மென்பொருள்களை உருவாக்கியுள்ளது. அவை மாநில தேவைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படும்.<br>• PRIA SOFT என்னும் பயன்பாட்டு மென்பொருள் தமிழ்நாட்டில் உள்ள **32** மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. Plan Plus எனும் பயன்பாட்டு மென்பொருளை **6** மாவட்டங்களில் செயல்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. (சென்னை தலைமையகத்தில் நிகழ்நேர பயனாளிகளை கண்காணிக்கும் இணையவழி பட்டியலாக்கம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.) |
| **8.** | காவல் துறை (CCTNS) | • குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு திட்டத்தினை (Crime & Criminal Tracking Network System-CCTNS) மாநிலம் முழுவதும் செயல்படுத்தும் பணி **2013** செப்டம்பர் **26** அன்று முடிக்கப்பட்டது. |



| | | |
|---|---|---|
| | | • மாநில தரவு மைய மையக்கணினிகள் மற்றும் காவல் நிலையங்கள் மற்றும் அதன் உயர் அலுவலகங்களுக்கான CCTNS கட்டமைப்பு ஆகியவற்றைக் கண்காணிக்கும் சாதனமாக நிறுவன மேலாண்மை அமைப்பு விளங்குகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டு, EMS உதவி மைய நடவடிக்கை **2014** பிப்ரவரி **1** முதல் இயங்கி வருகிறது. முறையீடுகளை பதிவு செய்வதற்காக CIPRUS என்னும் பயன்பாட்டு மென்பொருள் உருவாக்கப் பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.<br>• CCTNS திட்டத்தின் இரண்டாம் கட்டம் **2014** ஏப்ரல் **1** முதல் தொடங்கப்பட்டது. இணையவழி புகார்கள் மற்றும் இதர சேவைகளின் புதிய பணியோட்டம் சார்ந்த குடிமக்களின் இணையதளம் ஒன்றை அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 9. | போக்குவரத்து துறை (VAHAN மற்றும் SARATHI) | • வாகன பதிவு நடவடிக்கைகளுக்காக **VAHAN** மற்றும் ஓட்டுநர் உரிமம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு **SARATHI** ஆகிய இரண்டு மென்பொருள் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. |
| 10. | கருவூலம் மற்றும் கணக்குகள் துறை (IF&HRMS ) | • ஒப்பந்தப்புள்ளி மூலம் அமைப்பு ஒருங்கிணைப்பாளரை தேர்ந்தெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. |
| 11. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை (HMIS) | • 267 மருத்துவமனைகள் மற்றும் 1,613 ஆரம்ப சுகாதார மையங்களில் உள்ள உடல்நல ஆவணங்களை பதிவேற்ற நல்வாழ்வு மேலாண்மை தகவலமைப்பு ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தினை 10,000 மருத்துவமனை பயனாளிகளுக்கு மேல் செயல்படுத்தி வருகிறார்கள். ஆரம்ப சுகாதார மையங்கள் மாதம் தோறும் மேலாண்மை தகவல் அமைப்பு அறிக்கைகளை அனுப்பி வருகின்றன. |



| | | |
|---|---|---|
| | | • மூன்றாம் கட்டமாக, நகர்ப்புறங்களில் உள்ள மூன்றாம் நிலை மருத்துவமனைகள் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகள் உள்ளிட்ட அரசு மருத்துவ கல்லூரிகளில் நடைமுறைப் படுத்தப்படும். |
| 12. | பள்ளிக்கல்வித் துறை (EMIS) | • கல்வி மேலாண்மை தகவலமைப்புடன் இணைக்கப்பட்ட புவிசார் தகவலமைப்பு வரைபடம், இத்துறைக்கு பள்ளிகளை கண்காணிக்க உதவி செய்வதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு பள்ளி செல்லும் குழந்தையையும் கண்காணிக்க உதவிபுரியும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 5 பள்ளிகளில் இது முன்னோடித் திட்டமாகத் தொடங்கப் பட்டுள்ளது.<br>• நாட்டிலேயே பள்ளி மேலாண்மை தகவலமைப்புடன் புவிசார் தகவலமைப்பு வரைபடத்தை ஒருங்கிணைத்த முதல் மாநிலம் தமிழகமாகும். |

| | | |
|---|---|---|
| 13. | உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | • பொது விநியோகத் திட்டத்திற்காக ஒருங்கிணைக்கப்பட்ட தீர்வு ஒன்று திட்டமிடப்பட்டு வருகிறது.<br>• அமைப்பு ஒருங்கிணைப் பாளரை தேர்வு செய்வதற்கான திட்ட கோரிக்கை (RFP) செயல்பாட்டில் உள்ளது. |
| 14. | தொழில் துறை<br>(MSME Department) | • தொழில்முனைவோர் மனு பகுதி 1 மற்றும் 2 ஆகியவற்றினை தாக்கல் செய்வதற்காக இணையவழி சேவை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. முக்கியமாக தொழில் முனைவோர்கள் மாவட்ட தொழில் மையத்தினை அணுகாமல் ஒப்புகை பெறுவதற்கு இச்சேவை உதவும்.<br>• இதன் மேம்பாட்டுப் பணி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. |



| | | |
|---|---|---|
| 15. | சமூகநலத்துறை<br>(ICDS) | • பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ஒருங்கிணைந்த அங்கன்வாடி மேலாண்மை அமைப்பு என்ற ஒரு முழுமையான மென்பொருள் தீர்வு உருவாக்கப்பட்டு வருகிறது. |

# <u>அத்தியாயம் – V</u>

# <u>2013–2014 ஆம்ஆண்டின் சிறப்பம்சங்கள்</u>

## 1. அரசுத் துறைகளுக்கான “மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது”

அரசுத் துறைகளில் மின் ஆளுமையின் உபயோகத்தினை உரிய வகையில் அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையில் **“மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது”** ஆண்டுதோறும் அரசுத் துறைகளுக்கு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

2012–13 ஆம் ஆண்டிற்கென விண்ணப்பங்கள் அரசுத் துறைகளிடமிருந்து பெறப்பட்டு, கீழ்க்கண்டவாறு விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளன :–

| வ. எண். | பிரிவு | விருதுக்கெனத்தேர்வு செய்யப்பட்டுள்ள அரசுத் துறை / மாவட்டம் |
|---|---|---|
| 1 | சிறந்த அரசு செயல்முறை மறுவடிவமைப்பு | வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகம் |
| 2 | புதுமையான முறையில் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி மக்களுக்கு சேவை அளிப்பதில் சிறந்த செயல்பாடு | தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் |
| 3 | மாவட்ட அளவிலான மின் ஆளுமைத் திட்ட முயற்சிகள் | பெரம்பலூர் மாவட்டம் |



## 2. மாணவர்களுக்கான “மின் ஆளுமைக்கான மாண்புமிகு முதலமைச்சரின் உயரிய விருது”

இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் மின் ஆளுமை ஆர்வலர்களுக்கிடையே மின்ஆளுமை குறித்த விழிப்புணர்வினை உண்டாக்க, புதுமையான மின் ஆளுமை மென்பொருள் உருவாக்கப் போட்டி ஒன்று ஆண்டுதோறும் நடத்தி, அதில் வெற்றியாளர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு “மாண்புமிகு முதலமைச்சரின் மின்ஆளுமைக்கான உயரிய விருது” வழங்க அரசு அறிவித்துள்ளது.

## 3. அரசுத்துறைகளுக்கு வழங்கப்படும் வசதிகள்

மின் ஆளுமை சேவைகளை அளிப்பதற்காக தமிழ்நாடு மாநில தரவு மையம், தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் பொதுச் சேவை மையங்கள் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை தகவல் தொழில்நுட்பவியல் துறை ஏற்படுத்தியுள்ளது.

## 4. இணையதள சேவை விளக்கக் கோப்பகம்

இணையதள சேவை விளக்கக் கோப்பகம் ஒன்று அதாவது **“**Online Demonstrative Services Directory**”** தமிழக

அரசின் இணையதளத்தில் வெளியிடப்படும் என அரசு அறிவித்துள்ளது. இந்த சேவை விளக்கக் கோப்பகத்தில் இணையதள சேவைகள் (Online e-Services), இணையதள முகவரிகள் (Website Addresses), சேவை தொடர்பான இணைப்புகள் (Links to the Services), உபயோகிப்போர் விளக்க வழிகாட்டி (Demonstrative User Guide) போன்ற விவரங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கென இடம்பெறும். இதனை செயல்படுத்திட ஏதுவாக ஒரு மென்பொருள் தயாரிக்கப்பட்டு பயனர் ஏற்பு சோதனையும் நிறைவு பெற்றுள்ளது.

## 5. திட்டக் கண்காணிப்பு மென்பொருள்

அரசின் திட்டங்கள் மக்களை விரைவில் சென்றடைய, திட்டங்களின் செயல்பாட்டினை காலமுறை அடிப்படையில் கண்காணித்து ஆய்வு செய்வது அவசியம் என்பதை கருத்தில் கொண்டு, ஒரு புதிய கண்காணிப்பு மென்பொருள், அதாவது **Scheme Monitoring Application Software** உருவாக்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. இதற்கு தேவையான மென்பொருள் தயாரிக்கப்பட்டு, பயனர் ஏற்பு சோதனையும் நிறைவு பெற்றுள்ளது



## 6. தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு தணிக்கை

அரசு இணையதளங்களையும், தகவல் தொழில்நுட்ப மென்பொருள்களையும் சீர்கேடு மற்றும் ஊடுருவலில் இருந்து பாதுகாக்க, தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு தணிக்கை பல கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தினால் பட்டியலிடப்பட்டுள்ள பாதுகாப்பு தணிக்கை முகமை, இதுவரை 20 அரசுத் துறைகளின் பயன்பாடுகளையும், தேசிய தகவவலியல் மையம் உருவாக்கியுள்ள இணைய தளங்கள் மற்றும் அதன் பயன்பாடுகளையும் பாதுகாப்பு தணிக்கை செய்துள்ளது.

## 7. அரசு ஊழியர்களுக்கு இணையவழி பாடத்திட்டங்கள்

அரசு ஊழியர்களின் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தவும், மாநிலத்தில் மின் ஆளுமை செயல்பாட்டினை விரைவுபடுத்தவும், இணையதளம் வாயிலாக பயிற்சி அளிப்பதற்காக இணையவழி பாடத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கான மென்பொருள் தயாரிக்கப்பட்டு, பயனர் ஏற்பு சோதனையும் நிறைவு பெற்றுள்ளது.

## 8. மின் ஆளுமை ஊக்குவிப்பு நிதி

அரசுத் துறைகளின் பல்வேறு சேவைகளை மின் ஆளுமை வழியாக வழங்க மின் ஆளுமை திட்டத்தின் கீழ் 14 துறைகள் தேர்வு செய்யப்பட்டு, கணினிமயமாக்கப்பட்டு வருகிறது. மின் ஆளுமை திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படாத அரசு துறைகளின் சேவைகளை மின் ஆளுமை மூலமாக செயல்படுத்த, மின் ஆளுமை ஊக்குவிப்பு நிதியாக(e-Governance Initiative Fund) ரூபாய் 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 9. தகவல் தொழில் நுட்பப் பணியாளர் அமைப்பு

மின் ஆளுமை சேவையை அரசு துறைகளுக்கிடையே செயல்படுத்திட தகவல் தொழில் நுட்ப பணியாளர் அமைப்பு ஒன்று மின்னாளுமை ஆணையரகத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டு, இதற்கென 98 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு மாநிலம் முழுவதும் தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் மின் ஆளுமைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும்.



## 10. தகவல் தொடர்பு தொழில்நுட்ப மென்பொருள் களஞ்சியம்

தற்போது அரசு முகமை மூலமாகவும், வெளிப்பணி சேவை முகமை வாயிலாகவும், அரசு துறைகளில் மென்பொருள் பயன்பாடுகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வெளிப்பணி சேவை முகமை மூலமாக செயல்படுத்தப்படும் மென்பொருள் சேவைகளுக்கு, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் முறையான ஒத்துழைப்போ, மேல் நடவடிக்கைக்கான செயல்பாடோ கிடைப்பதில்லை. மேலும், மூல மென்பொருள் மற்றும் கடந்த கால செயல்பாடு குறித்த ஆவண விளக்கம் கிடைப்பதும் அரிதாகி விடுகிறது. இதனால் துறை சார்ந்த தொடர்ச்சியான சேவைகள் பாதிக்கப்படும். இம்மாதிரியான இடர்பாட்டை களைய மையப்படுத்தப்பட்ட தகவல் தொடர்பு தொழில்நுட்ப மென்பொருள் களஞ்சியம் ஒன்று ரூபாய் 17 இலட்சத்தில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான மென்பொருள் தயாரிக்கப்பட்டு, பயனர் ஏற்பு சோதனையும் நிறைவு பெற்றுள்ளது.

## 11. குறுந்தகவல் மூலமாக சேவை நிலை தெரிந்து கொள்ள வசதி

மாநிலத்தில் கைபேசியின் பயன்பாடு அதிகமாக உள்ள நிலையில், மின் மாவட்ட சேவை மூலமாக பெறப்படும்

விண்ணப்பங்கள் எந்த நிலையில் உள்ளது என்ற விபரம் குறுந்தகவலாக மக்களுக்கு கைபேசி மூலம் சென்றடையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு ரூ.1,20,50,000/– மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.

## 12. திட்டத் தரவு மேலாண்மை அமைப்பு

அரசு திட்ட செயல்பாட்டினை கண்காணித்து முறைப்படுத்த, அரசு துறைகளுக்கிடையே நடைபெறும் பல்வேறு திட்ட செயல்பாடுகளின் விவரங்களை சேகரித்து, நெறிபடுத்தி அறிக்கை வெளியிடுவது மிகவும் அவசியமாகிறது. ஒவ்வொரு பணிமுறை திட்டத்தின் இலக்கு மற்றும் வெற்றி நிலையை அரசு விரும்பியது போல் அடைய, ஒவ்வொரு திட்டத்தின் செயல்திறனை அளவிட்டு, பரிவர்த்தனை சேவை நிலவரத்தினை தெரிந்து கொள்வது அவசியமாகிறது. இத்தேவைகளை பூர்த்தி செய்ய, மையப்படுத்தப்பட்ட திட்ட தரவு மேலாண்மை அமைப்பு ஒன்றை ரூ.22 இலட்சம் செலவில் உருவாக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.



## 13. திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு மையம்

தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் திறன் மேம்பாட்டிற்கான தேவைகளை பூர்த்தி செய்திட, ‘‘திறன் மேம்பாட்டு சிறப்பு மையம்’’ ஒன்றினை அமைத்திட தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. மின் ஆளுமைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அரசு துறைகளில் குடிமக்களுக்கான மின்னணு தேவைகளை அளித்திட தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியலில் மனிதவள திறன் மேம்பாடு மற்றும் தேவைகளை இம்மையம் பூர்த்தி செய்கிறது. அரசு துறை ஊழியர்களின் திறன் மேம்பாட்டினை தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியலில் அதிகரித்திட, உரிய வசதிகளை உருவாக்கிட ஏதுவாக இம்மையம் செயல்படும்.

இம்மையத்தை தமிழ்நாடு மின்னணு நிறுவனமும், மத்திய அரசின் C-DAC (சென்னை) நிறுவனமும் இணைந்து அமைக்கும். தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சாராத மேகக் கணினிய சூழலில் அமைந்த உட்கட்டமைப்பு, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் C-DAC நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு, அதன் மூலம், இம்மையத்தில் தொழில்நுட்ப நிறுவனங்கள் தங்களுடைய பங்காக அவர்களது மென்பொருளை நிறுவி, அதனை உபயோகிப்பதன் மூலம் அரசுத் துறை ஊழியர்களின்

தகவல் தொழில்நுட்பத் திறன் உருவாக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட முடியும்.

திறன் மேம்பாடு சிறப்பு மையத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள முக்கியமான செயல்பாடுகள் :

1. அறிவு களஞ்சியமாக செயல்படல்.
2. புதிய கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி நடத்திட ஏதுவான சூழ்நிலை உருவாக்குதல்.
3. அறிவு பங்கீடு, பரிமாற்றம் மற்றும் பரவலாக்கலுக்கான மையமாக விளங்குதல்.
4. பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டை அளித்தல்.



# அத்தியாயம் –VI

# 2013–2014ஆம் ஆண்டின் சாதனைகள்

## 1. eTaal

குறிக்கோள் திட்டங்கள் உள்ளிட்ட மத்திய மற்றும் மாநில அளவிலான திட்டங்களின் மின்னணு பரிமாற்ற புள்ளி விவரங்களின் பரவலுக்கான ஒரு இணைய சேவை தளமே **eTaal** எனப்படும். கிட்டத்தட்ட நிகழ்நேர அடிப்படையில் அவ்வப்போது இணைய வாயிலான செயல்பாடுகளின் பரிமாற்றம் குறித்த புள்ளிவிவரங்களை **eTaal** பெறுகிறது. மேற்படி புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு மாநிலங்கள் / திட்டங்கள் ஆகியவை தேசிய அளவில் தரவரிசைப் படுத்தப்படுகின்றன. சென்ற வருடம் தரவரிசையில் 11வது இடத்தில் இருந்த தமிழ்நாடு, பல்வேறு அரசு துறைகளின் ஒருங்கிணைப்புடனும், தமிழ்நாடு மின்னாளுமை முகமை எடுத்த தொடர் முயற்சிகளின் பயனாகவும், மாநில அரசு திட்டங்களைப் பொறுத்தவரையில், மொத்த மின்னணு பரிமாற்றங்களில், இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

## 2. மின்மாவட்டங்கள்

பல்வேறு துறைகளை உள்ளடக்கிய மின்மாவட்ட திட்டத்தின் கீழ் 33 சேவைகள் கண்டறியப்பட்டுள்ளன. இதுவரை, 19 சேவைகள், இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 7 மாவட்டங்களில் அனைத்து வட்டங்களிலும் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள மாவட்டங்களில் இத்திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

மின்மாவட்டத் திட்டத்தின் கீழ் 27.07.2014 வரை வருவாய் மற்றும் சமூகநலத் துறையின் கீழ் வழங்கப்பட்ட மின் மாவட்ட சேவைகளின் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | மின்மாவட்டத் திட்டம் – பரிமாற்ற விவரங்கள் (27.07.2014ன் படி) | பரிமாற்ற எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வருவாய் துறை சேவைகள் | 21,52,130 |
| 2. | சமூகநலத் துறை சேவைகள் | 46,442 |
| 3. | பயன்பாட்டு சேவைகள் | 367 |
| | **மொத்த பரிமாற்றங்கள்** | **21,98,939** |



## அத்தியாயம் –VII

# தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் நுட்பவியல் நிறுவனம்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் என்பது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தொழில் துறையின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் ஒரு சுயாட்சி உரிமையுள்ள, இலாபத்தைக் கருதிச் செயல்படாத நிறுவனமாகும். தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு கல்வி நிறுவனங்களிலிருந்து படித்து முடித்து வெளிவரும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதும், அதன் மூலம் அவர்களை தொழில்துறைக்கு உகந்தவர்களாக மாற்றுவதும், தகவல் மற்றும் தகவல் தொடர்பு நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு தகுதியுடையவர்களாக உருவாக்குவதும் இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

இந்நிறுவனம், தகவல் தொழில் நுட்பவியல் துறையைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் கொண்ட தன்னாட்சி குழு மூலம் நிர்வகிக்கப்

படுகிறது. தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் நுட்பவியல் நிறுவனம், பொது மற்றும் தனியார் கூட்டுமுயற்சியில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயிற்சி அளித்து, அதன்மூலம் மாணவர்களை தொழில்துறைக்கான தகுதி பெறச்செய்யும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட ஒரு முன்னோடி நிறுவனமாகும்.

2013–14 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம், பின்வரும் முயற்சிகளை செயல்படுத்தியுள்ளது:

- தமிழகத்தில் உள்ள 650 உயர்கல்வி நிறுவனங்களிலுள்ள 1,630 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, பட்டப்படிப்பு முடிக்கும் ஒரு இலட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

- ஆசிரியர்களின் திறன் வளர்ச்சிக்காக 70 பயிற்சி திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

- மத்திய அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை கணினி கல்வித் திட்டத்தின் கீழ் 23,000 மாணவர்களை மதிப்பீடு செய்து சான்றிதழ் வழங்கியுள்ளது.



- தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 3 பன்னாட்டு ஆய்வு இதழ்களில், 87 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது.

- தொழில்துறை கல்வி நிறுவன கலந்துரையாடலுக்கான 6 மாநாடுகள் (ICTACT Bridge) 6 நகரங்களில் நடத்தப்பட்டன. மேலும் 47 தொழில்நுட்ப மாநாடுகள் (ICTACT Power Seminars) தமிழக மாணவர்களுக்காக நடத்தப் பெற்றன.

- தமிழக அரசின் 7 திட்டங்களை 2013–14ஆம் ஆண்டில் வெற்றிகரமாக செயல்படுத்தி முடித்துள்ளது.

- முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களான NVDIA மற்றும் IBM ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துள்ளது.

## 2013–14ல் முடிவு பெற்ற அரசுத் திட்டங்கள்

பயிற்சி அளிக்கும் திறனை ஒருங்கே பெற்ற இந்நிறுவனம், அரசுத் துறை நிறுவனங்களின் பணியாளர்களுக்கு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும்

மின்னாளுமையில் பயிற்சி அளித்து, அரசுக்கு தனது சீரிய பணியை ஆற்றி வருகிறது. இந்நிறுவனம், அரசுத் துறையின் பல்வேறு திட்டங்களிலும் பங்கெடுத்து வருகிறது. 2013–14ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்கள் பின்வருமாறு :

| வ.எண். | திட்டத்தின் பெயர் | துறை |
|---|---|---|
| 1. | ஐ.டி.ஐ. மாணவர்களுக்கான அடிப்படை கணினிப் பயிற்சி | தமிழ்நாடு அரசு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை |
| 2. | சமூக நலத்துறையால் நடத்தப்படும் விடுதிகளில் உள்ள 100 பெண்களுக்கு பயிற்சி | தமிழ்நாடு அரசு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை |
| 3. | 5,000 கல்லூரி மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பத் திறன் பயிற்சி | தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை |
| 4. | அடிப்படை கணினித் திட்டத்தின்கீழ் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்குதல் | மத்திய அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகம் |
| 5. | 100 மாணவர்களுக்கு மென்திறன் / தகவல் தொழில்நுட்பத் திறன் பயிற்சி | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனம், சென்னை |
| 6. | தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து 50 தொழில் முனைவோர் மேம்பாட்டு மையங்கள் அமைத்தல் | குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் |
| 7. | NEEDS திட்டத்தின் கீழ் பயிற்சி திட்டங்களை மதிப்பீடு செய்தல் | குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் |

## 2. பன்னாட்டு ஆராய்ச்சி இதழ்கள்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் காலாண்டுகளுக்கு ஒரு முறை, அதாவது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, தகவல் தொழில் நுட்பம் (IJCT), மென் கணினி (IJSC) ஒளிப்பேழை அல்லது காட்சி ஒளிப் பேழை (IJIVP) ஆகிய 3 பன்னாட்டு ஆய்வு இதழ்களை வெளியிட்டு வருகிறது. இந்த 3 இதழ்களுக்கான இண்டெக்ஸ் கோப்பர்னிக்கஸ் (Index Copernicus) மதிப்பீடு தலா 5.09 ஆகும். மேலும் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தால் (மின் பொறியாளர் நிறுவனம்) வெளியிடப்படும் இன்ஸ்பெக் (Inspec) என்ற அறிவியல் மற்றும் தொழில் நுட்ப படைப்புகளை வரிசைப்படுத்தும் தரவுத் தொகுப்பில், இந்நிறுவனத்தின் இதழ்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

## 3. மாநாடுகள், குழுக்கள் மற்றும் கருத்தரங்குகள்

2013–2014ம் ஆண்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் ஆறு ICTACT BRIDGE மாநாடுகளை தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் நடத்தியுள்ளது. 2013–2014ஆம் கல்வியாண்டில், இந்நிறுவனத்தின் சார்பில்



மாணவர்களுக்கான 47 திறன்மிகு கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

## 4. தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் 2014–15 ஆம் ஆண்டிற்கான புது முயற்சிகள்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் 2014–15 ஆண்டிற்கான பின்வரும் புதிய திட்டங்களை வகுத்துள்ளது:–

### 4.1. 2014–15க்கான புதிய அரசு திட்டங்கள்

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்திற்கான அடிப்படை கணினி கல்வித் திட்டத்தின் கீழ் 14,000 அரசு ஐ.டி.ஐ. மாணவர்களுக்கு கணினி கல்வியறிவுக்கான பயிற்சியளிக்கவுள்ளது.
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 2,000 வேலையில்லா இளைஞர்களுக்கு, BFSI துறையில் பணிபெறும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்கவுள்ளது.
- இந்நிறுவனம், தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் தமிழகம் முழுவதும், 44 ஐ.டி.ஐ.

களில் உள்ள பயிற்சியாளர்களுக்கு தகவல் தொழில் நுட்பத்திறன் பயிற்சியளிக்கவுள்ளது.

- தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம், 5 சமூக நல விடுதிகளிலுள்ள 100 பெண்களுக்கு தகவல் தொழில் நுட்பத்திறன் மற்றும் மென்திறன் மேம்பாட்டு பயிற்சிகளை சமூக நல இயக்குநரகம் மூலம் அளிக்கவுள்ளது.

## 4.2 பள்ளிகளுக்கான திட்டங்கள்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம், பள்ளிகளுக்கான தனது சேவையை துவங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் பள்ளிக் கல்வித்துறையிலுள்ள K-12 ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியளிப்பில், கவனம் செலுத்த உள்ளது. இத்திட்டத்தின் மூலம் இந்நிறுவனம், பள்ளிகளின் மேம்பாட்டிற்கான பயிற்சிகள், சேவைகள், நிகழ்ச்சிகள், பயிற்சி அரங்குகள் மற்றும் திறன் மேம்பாட்டுப் போட்டிகள் போன்றவைகளை மாணவர்களின் நலனுக்காக, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நடத்தவுள்ளது.



## 5. ஸ்கை கேம்பஸ் (Sky Campus)

“ஸ்கை கேம்பஸ்” என்பது MOOC (Massive Open Online Course) பயிற்சி திட்டத்திற்கான ஒரு முழுமையான தளமாகும். இதன் மூலம் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளில் பங்கேற்கலாம். 21ஆம் நூற்றாண்டில் வெற்றியை உறுதிபடுத்தும் வகையில் பொதுமக்களுக்கு கல்வி மற்றும் வாழ்வு மேம்பாடு அளிப்பதே இதன் நோக்கமாகும்.

## 6. ஐசிடிஏசிடி யூத் (ICTACT Youth)

தொழில் நிறுவனங்களில் மாணவர்களின் வேலை பெறக்கூடிய திறனை மேம்படுத்தும் வகையில், இந்நிறுவனம் ஐசிடிஏசிடி யூத் என்னும் திட்டத்தினைத் தொடங்கியுள்ளது. இத்திட்டம் தொழில் துறையில் இடைவெளியிருப்பதாக கண்டறியப்பட்ட தகவல் தொடர்புத்திறன் மற்றும் தலைமை பண்புத் திறன் ஆகியவற்றை மாணவர்களிடையே உருவாக்கும் வகையில் அமையும்.

ஐசிடிஏசிடி யூத் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம், ஐசிடிஏசிடி யூத் டாக் மற்றும் ஐசிடிஏசிடி யூத் பிரசன்ட் என்னும் மாணவர்களுக்கான இரண்டு போட்டிகளை துவக்கியுள்ளது.

இது ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும். இதன் மூலம் மாணவர்களின் பேச்சுத் திறன், திட்டங்களை சமர்ப்பிக்கும் திறன் மற்றும் தலைமை பண்பு திறன் ஆகியவை மேம்படும்.

இந்நிறுவனம், ஐசிடிஏசிடி யூத் ஸம்மிட் என்னும் இளைஞர்களுக்கான குறிப்பாக கல்லூரி மாணவர்களுக்கான வருடாந்திர உச்சி மாநாட்டை (annual summit) நடத்தவுள்ளது.

இந்நிறுவனம், தமிழக கல்லூரிகளில் ஐசிடிஏசிடி யூத் சர்க்கிள் என்னும் மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டுக் குழுக்களை அமைக்கவுள்ளது. இதன் மூலம் எளிதான முறையில் மாணவர்கள் தங்கள் பேச்சுத் திறன், தகவல் தொடர்பு திறன் போன்ற பல திறன்களை மேம்படுத்திக் கொள்ள முடியும்.

இக்குழுவின் நோக்கம், மாணவர்கள் தங்களது பேச்சு, கேட்பு மற்றும் சிந்தனைத் திறன் ஆகியவற்றை எளிதான, இணக்கமான மற்றும் உதவிகரமான சூழ்நிலையில் மேம்படுத்திக்கொள்ள உதவுவதேயாகும். இதன் உறுப்பினர்கள் தங்களது தகவல் தொடர்புத் திறனையும், தலைமைப் பண்புகளையும் மேம்படுத்தி, தன்னம்பிக்கையையும் சுயமுன்னேற்றத்தையும் வளர்த்துக் கொள்ள இக்குழு உதவுகிறது.



## அத்தியாயம் – VIII

## தமிழ் இணையக் கல்விக்கழகம்

### 1. அறிமுகம்

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஒரு சங்கமாகத் தமிழக அரசால் **2000**, மே **18** ஆம் நாள், உலகு தழுவி வாழும் தமிழ்ச் சமுதாயத்திற்கும், மற்றையோருக்கும் இணையம் வழி தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாட்டு வளங்களை வழங்குவதையும், வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதையும் நோக்கமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தமிழ் இணையக் கல்விக்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 2. நிர்வாக அமைப்பு


தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பவியல்துறையின் கீழ் செயல்பட்டுவருகிறது.

தமிழ் இணையக் கல்விக்கழக இயக்குநர் குழுமம், தகவல் தொழில்நுட்பவியல் துறை செயலாளர் அவர்களின் தலைமையில்,

கீழ்க்காணும் **8** உறுப்பினர்களைக் கொண்டு அண்மையில் மாற்றி அமைக்கப்பட்டது :

1. துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
2. அரசுச் செயலாளர் (செலவு), நிதித்துறை
3. அரசு முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை
4. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை
5. அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை,
6. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மின்னணு நிறுவனம்
7. இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்குநரகம்
8. இயக்குநர், தமிழ் இணையக் கல்விக்கழகம்.

இந்நிறுவனத்தின் நிர்வாக அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது :






## 3. நோக்கம்

உலகு தழுவிய நிலையில் வாழும் தமிழ் மக்களும், தமிழில் ஈடுபாடு கொண்டுள்ள பிற மொழியினரும் தமிழ் மொழியையும், கணினித்தமிழ் மற்றும் தமிழ்ப் பயன்பாட்டு மென்பொருள்களைக் கற்கவும், தமிழர் வரலாறு, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவை பற்றி அறிந்துகொள்ளவும் தேவையான வாய்ப்புகளை இணையம் வழியாக ஏற்படுத்துவதும், புலம்பெயர்ந்த தமிழர்கள், அரசு, கல்வி, ஊடகம், வணிகம், போன்ற பல்துறைகளுக்கும் வேண்டிய கணினித் தேவைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிந்து, நிறுவி, பராமரித்து, பயிற்சியளித்துப் பயன்பாட்டை பெருக்குதலும் இணையவழி அளிப்பதும் இதன் நோக்கமாகும்.

## 4. குறிக்கோள்

- கணினித் தமிழுக்கான தீர்வுகளை உருவாக்குதல்.
- உலகளாவிய தமிழ்ச் சமுதாயத்தினர்க்கும், தமிழியலில் ஈடுபாடுள்ள மற்றையோர்க்கும் தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு பற்றிய கல்விச் சாதனங்களை உருவாக்கி இணையம் வழியாக அளித்தல்.

- உலகு தழுவி வாழும் தமிழர்கள் தங்கள் பாரம்பரியத்தோடு தொடர்புகொண்டு வாழ்வதற்கு துணைபுரியும் வகையில் அவர்கள் தேவைக்கேற்பப் பாடத் திட்டங்களை உருவாக்கி அளித்தல்.
- உலகின் பல நாடுகளில் வாழும் தமிழர்கள் உருவாக்கும் கல்வியறிவுச் சாதனங்களைத் தொகுத்து, அவற்றைப் பரவலாகத் தமிழ் மக்களுக்கு வழங்கும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுதல்.
- தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு தொடர்பான பாடத் திட்டங்களை வகுத்தல் மற்றும் உரிய நியமங்களை நிறைவு செய்தோருக்கு, அவர்கள் கற்ற பாடங்களின் தகுதிக்கு ஏற்ப தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் வழியாகச் சான்றிதழ் / பட்டயம் / பட்டம் வழங்க ஏற்பாடு செய்தல்.

## 5. தமிழ் இணையக் கல்விக்கழகச் செயல்பாடுகள்

- **கல்வித்திட்டங்கள்**

  அரிச்சுவடி முதல் ஆராய்ச்சி வரை கல்வித்திட்டங்களை வகுத்து வழங்குதல்



- **கணினித்தமிழ்**

  தமிழ் மென்பொருள் உருவாக்கத் தேவையான தரவுதொகுப்புகளை உருவாக்க அடிப்படை ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

- **மின்னூலகம்**

  மாணவர்களுக்கும், மற்றையோருக்கும் பயன்படும் வகையில் ஒரு மின்னூலகம் உருவாக்குதல்.

- **தமிழ் மென்பொருள் உருவாக்குதல்**

  தமிழக அரசு வழங்கிய தமிழ் மென்பொருள் உருவாக்கும் நிதியின் மூலம், தமிழில் மென்பொருள்கள் உருவாக்குதல் மற்றும் மற்றையோர் உருவாக்கும் மென்பொருள்களைச் சோதித்து சான்றளித்தல்.

- **தமிழ் கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகளை ஆவணப்படுத்துதலும் பாதுகாத்தலும்**

  தமிழ் கலாச்சார செயல்பாடுகளை தகவல் பரவலாக்கத்திற்கும், அறிவு பகிர்வுக்கும் ஏற்ற வகையில் ஆவணப்படுத்தித் தரவேற்றுதல்.

## 6. கல்வித் திட்டங்கள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் தற்போது தொடக்கக் கல்வி, சான்றிதழ், பட்டயம், மேற்பட்டயம், இளநிலைத் தமிழியல் பட்டம் ஆகிய கல்வித் திட்டங்களை அளித்து வருகிறது.

| தொடக்கக் கல்வி | சான்றிதழ்க் கல்வி | மேற்சான்றிதழ்க் கல்வி | பட்டம் |
|---|---|---|---|
| அறிமுக நிலைப் பாடம் (எழுத்துகள் மறறும் பாடல்கள்) | அடிப்படை நிலை ( **1-2** ஆம் வகுப்பு) | நிலை **–1** (**7-8** ஆம் வகுப்பு) | பட்டயம் |
| | இடைநிலை ( **3-4** ஆம் வகுப்பு) | நிலை **–2** (**9-10**ஆம் வகுப்பு) | மேற்பட்டயம் |
| | மேல்நிலை ( **5-6** ஆம் வகுப்பு) | நிலை **–3** (**11-12**ஆம் வகுப்பு) | பட்டம் (இளநிலைத் தமிழியல்) |

## 6.1 பதிவு செய்துள்ள மாணவர்கள்

**70** நாடுகளைச் சேர்ந்த **14,245** மாணவர்கள் பல்வேறு பாடத்திட்டங்களுக்குப் பதிவு செய்துள்ளனர். **3,673** மாணவர்கள் சான்றிதழ் படிப்பிலும், **54** மாணவர்கள் மேற்சான்றிதழ்ப் படிப்பிலும், **250** மாணவர்கள் பட்டயப் படிப்பிலும், **137**



மாணவர்கள் மேற்பட்டயப் படிப்பிலும், **132** மாணவர்கள் பட்டப்படிப்பிலும் தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ளனர்.

## 6.2 தொடர்பு மையங்கள்

உலகெங்கிலும் உள்ள **18** நாடுகளில் உள்ள **68** தொடர்பு மையங்கள் மூலம் இக்கல்வித்திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

## 6.3 மாணவர்களுக்கு குறுந்தகடுகள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் மாணவர்களின் நலனுக்காகவும், மற்றையோரின் நலனுக்காகவும் தொடக்க நிலை, அடிப்படைநிலை, இடைநிலை, மேல்நிலை, தமிழ் கற்க, தமிழ் கற்போம், திருக்குறள், கலைச்சொல் பேரகராதி ஆகிய குறுந்தகடுகளை உருவாக்கி வெளியிட்டுள்ளது.

## 6.4 இணைய வகுப்பறை

இணைய வகுப்பறையில் 'தமிழ் கற்போம்' (Learn Tamil) எனும் தலைப்பில் முனைவர் மா.நன்னன் அவர்கள் **39** பாடங்களில் தமிழ் வழியாகத் தமிழ் கற்பிக்கிறார். பேரா. தி.ப. சித்தலிங்கையா அவர்கள் **81** பாடங்களில் ஆங்கிலம் வழியாகத்

தமிழ் கற்பிற்கிறார். திரு.சாமிகண்ணு அவர்கள் **19** பாடங்களில் பிரெஞ்சு வழியாகத் தமிழ் கற்பிக்கிறார்.

மேலும், கவிக்கோ ஞானச்செல்வன், திரு.சு.கிருஷ்ணசந்த் சோர்டியா, முனைவர் ப.ச. ஏசுதாசன், முனைவர் ஜே.ஆர்.இலட்சமி ஆகியோரின் ஒளிவடிவ விரிவுரைகள் பட்டப்படிப்பு மாணவர்களுக்குக் கிடைக்கிறது. இந்த விரிவுரைகள் எல்லாம் தமிழ் இணையக் கல்விக் கழக இணைய தளத்திலும், குறுந்தகடுகளாகவும் உள்ளன.

## 7. கணினித்தமிழ்

- கணினித்தமிழ் ஆராய்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும் கணினித்தமிழ் ஆய்வுக்கூடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் தமிழ் இலக்கியங்களுக்கான இலக்கணக்குறிப்பு, வாய்மொழித்தரவு தொகுப்பு, தொடரியல் மற்றும் பொருண்மையியல் விளக்கத்துடன் கூடிய தமிழ் விரிதரவு, உச்சரிப்புடன் கூடிய மின் அகராதி போன்றவைகளை உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இவை அனைத்தும் தமிழ் மென்பொருள் உருவாக்கத் தேவையான தரவு தொகுப்புகளை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.



- ஒருங்குறி (Unicode) மற்றும் அனைத்துரு எழுத்துரு (TACE) முறைகள் தமிழ்நாடு அரசின் தரநிர்ணயமாக அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப, தமிழ் விசைப்பலகை இடைமுகமும், தமிழ் எழுத்துருக்களும் உருவாக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்காகத் தமிழ் இணையக் கல்விக்கழக இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
- தமிழில் மென்பொருள் உருவாக்கத் தேவையான தளத்தை வழங்க ‘‘தமிழ் மென்பொருள் உருவாக்க மையம்’’ ஒன்றை தமிழ் இணையக் கல்விக்கழகம் நிறுவி வருகிறது. இத்திடடத்திற்கு தமிழக அரசு, **2013-14**ஆம் ஆண்டு ரூ.**45** இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது.
- கணினித்தமிழ் மற்றும் ஒருங்குறி தொடர்பான செயல்பாடுகளில் தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழக அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.
- ‘ஒருங்குறியில் தமிழ் – தேவைகளும் தீர்வுகளும்’ என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கை **05.03.2014** அன்று தமிழ் இணையக் கல்விக்கழகம் நடத்தியது. இக்கருத்தரங்கில் கீழ்க்கண்ட தலைப்புகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

1. தமிழ் பின்னங்கள் மற்றும் குறியீடுகள் – பெயரிடல் மற்றும் வரிவடிவம்
2. தமிழ் அனைத்து வரியுருக்களுக்கான குறியீடு (TACE**16**)
3. ஒரு இந்தியா – ஒரு வரிவடிவம் செயல் திட்டம்
4. அரசு துறைகளில் ஒருங்குறி எழுத்துருக்கள் மற்றும் விசைப்பலகை பயன்பாட்டை வலியுறுத்தல்
5. நவீன சாதனங்களில் தமிழ் பயன்பாடு

மேற்கண்ட தலைப்புகள் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வுகளைக் காண்பதற்காக, கருத்தரங்கின் அறிவுரையின்படி ஒரு உயர்மட்டக் குழு அமைக்க அரசுக்குப் பரிந்துரை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

## 8. மின்னூலகம்

- தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மின்நூலகம், மாணவர்கள் மற்றும் ஏனையோரின் மற்றும் பயன்பாட்டிற்காக உருவமைக்கப்பட்டுள்ளது. இம்மின் நூலகத்தில் தமிழ் இலக்கிய நூல்கள், அகராதிகள், தமிழ் தொழில்நுட்பக் கலைச்சொற்கள், கலைக்களஞ்சியம், பண்பாட்டுக் காட்சியகம், சுவடிக்காட்சியகம் என்பவை உள்ளன.



- சங்ககாலம் முதற்கொண்டு தற்காலம் வரையிலான தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் கொண்ட 2,700 நூல்கள் மின்நூலகத்தில் இடம்பெற்றுள்ளன.
- பொருள்வாரியான, விரிவான பட்டியலிடப்பட்டிருப்பதும், தேடுதல் வசதியும் இம்மின்னூலகத்தின் தனிச்சிறப்பாகும்.

## 9. தமிழ் மென்பொருள் உருவாக்கல்

- தமிழ் மென்பொருள் உருவாக்க நிதியின்கீழ், ஒளி வழித் தமிழ் எழுத்துரு படித்தல், கையெழுத்துப் பிரதியிலிருந்து ஒளி வழித் தமிழ் எழுத்துரு படித்தல், மின் அகராதி, தமிழ் சொற்களஞ்சியப் பகுப்பாய்வு, கையடக்க சாதனங்களில் திருக்குறள் பற்றிய நுண்ணறிவு தகவல் பெறுதல் போன்ற பல தமிழ்மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- தமிழுக்கான முன்கணிப்பு உரை மென்பொருள் வடிவமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.
- தமிழ் மென்பொருள் உருவாக்க நிதியின் கீழ், மேலும் பல தமிழ் மென்பொருள்கள் உருவாக்கப்படும்.

## 10. தமிழ் பண்பாட்டுக் கூறுகளை ஆவணப்படுத்துதலும், பாதுகாத்தலும்

- தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் **28.04.2014** அன்று ஒருநாள் பணியரங்கம் “இணையம் வழி தமிழ் வரலாறு, பண்பாடு, கலை, இலக்கியம்” என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. இப்பணியரங்கில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, தமிழக வரலாறு, பண்பாடு, கலை, இலக்கியம் ஆகியன பற்றிய தகவல்களை அனைத்துத் துறைகளுடனும் ஒருங்கிணைந்து, திரட்டி ஆவணப்படுத்தி, தளப்படுத்தத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ள தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு வழிகாட்ட ஒரு வல்லுநர் குழு அமைக்கப்படும்.

## 11. கட்டமைப்பு

- தமிழ் இணையக் கல்விக்கழகக் கட்டடம் முழுவதுமாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதில், **01.05.2011** முதல் தமிழ் இணையக் கல்விக்கழக அலுவலகம் செயல்பட்டுவருகிறது. தற்போது கலையரங்கம் மற்றும் படத்தளம் ஆகியவற்றின் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.



## 12. பிற செயல்பாடுகள்

- பல்வேறு பல்கலைக்கழகங்கள் தொகுத்து அளித்துள்ள ஏறத்தாழ **2,50,000** கலைச்சொற்கள் துறைவாரியாகப் பகுக்கப்பட்டு, **14** தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. அனைத்து **14** தொகுதிகளும் ஒரே குறுந்தகட்டில் கிடைக்கிறது.

<u>அத்தியாயம் – IX</u>

# <u>தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம்</u>

## 1. முன்னுரை

அரசு கேபிள் டி.வி. நிறுவனம் 04.10.2007அன்று துவங்கப்பட்டது. இதன் நோக்கம் குறைந்த கட்டணத்தில் சிறந்த கேபிள் டி.வி. சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதே ஆகும். இதற்கென, தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய நான்கு இடங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டன. ஆயினும், பல்வேறு காரணங்களினால் இந்நிறுவனம் செயலிழந்த நிலையில் இருந்தது.

இந்த அரசு, மே 2011–ல் பொறுப்பேற்ற பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அரசு கேபிள் டிவி நிறுவனம் புனரமைக்கப்பட்டு, புத்துயிரூட்டப்பட்டு "தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்" என பெயர்மாற்றம் செய்யப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30.08.2011 அன்று சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் மாதம் ரூ.70/– என்ற கட்டணத்தில் தனது கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு, கேபிள்



ஆபரேட்டர்கள் மூலம் வழங்கும் எனவும், இதில் ரூ.20/–ஐ கேபிள் ஆபரேட்டர்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு செலுத்துவார்கள் எனவும் அறிவிப்பு வெளியிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 02.09.2011 அன்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவையை தமிழகம் முழுவதற்கும் (சென்னை தவிர) துவக்கி வைத்தார்கள்.

## 2. நோக்கம்

பொதுமக்களுக்கு குறைந்த கட்டணத்தில் தரமான கேபிள் டிவி சேவையை வழங்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் புனரமைக்கப்பட்டது.

## 3. பின்னணிச்சூழல் மற்றும் வளர்ச்சி

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தனது சேவையினை தொடங்குவதற்கு முன்னர், தமிழ்நாட்டில் ஒரு சில பன்முக கேபிள் ஆபரேட்டர்கள், அமைப்பு சாரா முறையில், கேபிள் ஆபரேட்டர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து அதிக அளவு சந்தா கட்டணங்களை வசூலித்து வந்தனர். அப்பொழுது, பொதுமக்கள் கேபிள் டிவி சேவையை பெற, உள்ளூர் கேபிள் டிவி

ஆபரேட்டர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.150 முதல் ரூ.250 வரை கேபிள் டிவி கட்டணமாக செலுத்தி வந்தனர். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் புனரமைக்கப்பட்டதால் தரமான கேபிள் டிவி சேவையினை ரூ.70/– என்ற மிகக் குறைந்த மாத கட்டணத்தில் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு வழங்க ஏதுவாக அமைந்தது. தற்போது, இந்நிறுவனம் இலவச சேனல்கள், கட்டண சேனல்கள் மற்றும் தனியார் உள்ளூர் சேனல்கள் உள்ளிட்ட 90 முதல் 100 சேனல்கள் வரை வழங்குகிறது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவை, பொதுமக்கள் மற்றும் கேபிள் ஆபரேட்டர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசால் உருவாக்கப்பட்ட நலத்திட்ட நடவடிக்கையாகும். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் சேவையானது, உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களிடமும், பொது மக்களிடமும் மாபெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. அதிக அளவிலான கேபிள் ஆபரேட்டர்கள் மற்றும் பொதுமக்கள் இந்நிறுவனத்தின்பால் ஈர்க்கப்பட்டு, அதன் சிக்னல்களை பயன்படுத்தி வருகின்றனர். 02.09.2011 அன்று 4.94 இலட்சங்கள் என இருந்த இந்நிறுவனத்தின் சந்தாதாரர்களின் எண்ணிக்கை, 15.07.2014 அன்று 26,246 உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள்



வாயிலாக 70.52 இலட்சமாக உயர்ந்ததன் மூலம் இது நிரூபணமாகிறது.

## 4. உட்கட்டமைப்பு

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 27 மாவட்ட தலைநகரங்களில் விருப்பமுள்ள பன்முக கேபிள் ஆபரேட்டர்களிடமிருந்து கட்டுப்பாட்டு அறைகளை குத்தகைக்கு எடுத்ததுடன், ஏற்கனவே நான்கு மாவட்டங்களில் இருந்த இந்நிறுவனத்தின் டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறைகளையும் புனரமைத்தது. இவ்வாறாக தற்பொழுது, இந்நிறுவனத்தின் கீழ் பன்முக கேபிள் ஆபரேட்டர்களிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட கட்டுப்பாட்டு அறைகளுடன் சேர்த்து மொத்தம் 63 கட்டுப்பாட்டு அறைகள் இயங்கி வருகின்றன. இந்த 63 கட்டுப்பாட்டு அறைகள் வாயிலாக 26,246 உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு கேபிள் சேவை தொடர்பினை மாநிலம் முழுவதும் இந்நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது.

## 5. நிறுவனத்தின் அமைப்பு

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், ஒரு தலைவர் மற்றும் ஒரு மேலாண்மை இயக்குநர் ஆகியோரால் தலைமை வகிக்கப்படுகிறது. தமிழ்நாடு முழுவதுமான இந்நிறுவனத்தின்

இயக்கம் மாவட்ட வருவாய் அலுவலர் பதவி நிலையில் உள்ள இரண்டு பொது மேலாளர்கள் மற்றும் துணை ஆட்சியர் பதவி நிலையிலுள்ள இரண்டு மேலாளர்களினால் நிர்வகிக்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் 5 துணை மேலாளர்களும், 14 பிரிவு உதவியாளர்களும் பணியாற்றுகின்றனர். ஒவ்வொரு மாவட்டத்திலும், வட்டாட்சியர் பதவி நிலையிலான ஒரு துணை மேலாளரின் கீழ் ஒரு வருவாய் ஆய்வாளர், ஒரு தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் 3 உதவி தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியாற்றுகின்றனர். இந்நிறுவனத்தின் தொழில்நுட்ப பிரிவு ஒரு முதன்மை தொழில்நுட்ப அலுவலராலும், கணக்குப் பிரிவு ஒரு நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலராலும் தலைமை வகிக்கப்படுகிறது.

## 6. சென்னை மாநகரத்தில் கேபிள் டி.வி. சேவை துவக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவைகளை சென்னை மாநகரப் பகுதிகளில் 20.10.2012 அன்று துவக்கி வைத்தார்கள். தற்பொழுது, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், சென்னை மாநகரப்பகுதிகளின் அனலாக் மற்றும் டிஜிட்டல் சிக்னல்களை உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்களுக்கு வழங்கி வருகிறது.

## 7. டிஜிட்டல்மயமாக்கம்

அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு மத்திய அரசின் தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்தின் 02.04.2008 நாளிட்ட குறிப்பு எண்.9/32/2007–BP&L–ன்படி, கட்டுப்பாட்டுடன் சேனல்களை வழங்கும் அமைப்பு (Conditional Access System - CAS) பகுதிகளுக்கான பன்முக கேபிள் ஆபரேட்டர் (MSO) உரிமம் வழங்கியுள்ளது. கேபிள் டிவி நெட்வொர்க் திருத்தச் சட்டம் 2011–ன்படி நாடு முழுவதும் 31.12.2014க்குள் கேபிள் டிவி சேவையானது டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும். இதில் முதல்கட்டமாக, 31.10.2012–க்குள் சென்னை உள்ளிட்ட நான்கு பெருநகரங்களின் கேபிள் சேவை டிஜிட்டல் மயமாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், டிஜிட்டல்மயமாக்கலுக்கு தேவையான, சென்னை DAS பகுதிகளுக்கான, பன்முக கேபிள் ஆபரேட்டர் (MSO) உரிமம் வழங்கக் கோரி 05.07.2012 அன்றும், தமிழ்நாட்டின் பிற பகுதிகளுக்கு உரிமம் வழங்கக் கோரி 23.11.2012 அன்றும் மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்திடம் விண்ணப்பித்து, அவ்விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

## 8. சென்னை மாநகருக்கான DAS உரிமம்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சென்னை DAS பகுதிகளுக்கான எம்.எஸ்.ஓ (MSO) உரிமம் கோரும் விண்ணப்பம் மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்திடம் நிலுவையில் உள்ளது. இது குறித்து மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சகம், டிராய் அமைப்பின் கவனத்திற்கு கொண்டு சென்றது. டிராய் அமைப்பின் பரிந்துரை குறித்து முடிவெடுப்பதற்காக, அமைச்சர்கள் கூட்டுக்குழுவினை **03.01.2013** அன்று மத்திய அரசு ஏற்படுத்தியது. இக்கூட்டுக்குழு தன்னுடைய அறிக்கையை இதுவரை சமர்ப்பிக்கவில்லை.

இதுகுறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் **16.12.2012** அன்று அப்போதைய இந்திய பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு DAS பகுதிகளுக்கான DAS உரிமம் (licence) வழங்கிட தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்திற்கு அறிவுறுத்துமாறு கோரியிருந்தார்கள். மேலும் வழக்கு எண்.**11649/2012** ல் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை, **06.12.2012** அன்று வழங்கிய இடைக்காலத் தீர்ப்பில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு DAS பகுதிகளுக்கான உரிமம் வழங்கும் நடைமுறைகள் தொடரலாம் எனவும், உரிமம் வழங்கலாம் எனவும்,



ஆனால், உரிமம் வழங்குதல் என்பது வழக்கின் இறுதி தீர்ப்பிற்கு உட்பட்டது எனவும் தீர்ப்பளித்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றமும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு DAS உரிமம் வழங்குவது குறித்த **05.07.2012** தேதியிட்ட அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் விண்ணப்பத்தின் மீது உடனடியாக முடிவெடுக்குமாறு மத்திய தகவல் ஒளிபரப்பு அமைச்சகத்திற்கு ஆணையிட்டது.

மேலும், இது தொடர்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் **03.06.2014** அன்று மாண்புமிகு இந்திய பிரதமரை நேரில் சந்தித்து அளித்துள்ள கோரிக்கை மனுவின் முக்கிய கோரிக்கைகளில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கு DAS உரிமம் வழங்குவது குறித்த கோரிக்கையும் ஒன்றாகும்.

## 9. சென்னை மாநகரப் பகுதியை டிஜிட்டல் மயமாக்க தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் எடுத்துவரும் நடவடிக்கைகள்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் சென்னை மாநரப்பகுதிகளில் கேபிள் டிவி சேவையினை டிஜிட்டல் மயமாக்கிட நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கென இந்நிறுவனம் கட்டுப்பாட்டுடன் சேனல்களை வழங்கும் அமைப்பு,


சந்தாதாரர்கள் மேலாண்மை அமைப்பு மற்றும் 10 லட்சம் செட்–டாப் பாக்ஸ்களை ஓராண்டிற்கான ஒப்பந்த விலை அடிப்படையில் வாங்கிடவும், நிர்மாணிக்கவும், சோதனை செய்து அமைத்திடவும் 25.09.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியது. முதற்கட்டமாக, 50,000 செட்–டாப் பாக்ஸ்கள் வாங்கப்பட்டன. இவற்றில் 20,000 செட்–டாப் பாக்ஸ்கள், 350 கேபிள் ஆபரேட்டர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்நிறுவனம், டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறையை மேம்படுத்தவும், செட்–டாப் பாக்ஸ் வாங்கவும், கட்டுப்பாட்டுடன் சேனல்களை வழங்கும் அமைப்பு (Conditonal Access System -CAS) மற்றும் சந்தாதாரர் மேலாண்மை அமைப்பு ஆகியவற்றிற்காகவும் கட்டுப்பாட்டு அறை தொடர்பான இதர உபகரணங்களை வாங்கவும் ரூ.20.72 கோடி முதலீடு செய்துள்ளது.

சென்னை மாநகரப் பகுதியில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தரமுடனும் தெளிவுடனும் 90 முதல் 100 சேனல்கள் வரை உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் வாயிலாக ரூ.70/– என்ற மிகக் குறைந்த மாத கட்டணத்தில் வழங்கி வருகிறது. தற்பொழுது, சென்னை மாநகரில் 820 உள்ளூர் கேபிள் ஆபரேட்டர்கள் வாயிலாக 3,40,000 சந்தாதாரர்களுக்கு கேபிள் டிவி சேவையினை வழங்கி வருகிறது.




## 10. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் நிதிநிலை செயல்பாடு

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தமிழக அரசின் 25 கோடி ரூபாய் பங்கு மூலதனத்தில் துவக்கப்பட்டது. மேலும் இந்நிறுவனம் ரூ.33 கோடியை அரசிடமிருந்து கடனாக பெற்றுள்ளது. 2008–09 நிதியாண்டில் ரூ.2.44 கோடி வருவாய் ஈட்டிய தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தற்பொழுது 2013–14 நிதியாண்டில் ரூ.163.92 கோடி வருவாய் (தணிக்கை செய்யப்படாதது) ஈட்டியுள்ளது.



இந்நிறுவனம் துவங்கப்பட்டதில் இருந்து 2011–12 நிதியாண்டு வரை, சுமார் 15.02 கோடி ரூபாய் நஷ்டத்தில் இருந்தது. எனினும், சந்தாதாரர் எண்ணிக்கையை அதிகரித்ததன் மூலமும், உள்ளூர் தனியார் சேனல் வருவாய் மூலமும் 2012–13 மற்றும் 2013–14 நிதியாண்டுகளில் கணிசமான இலாபம் ஈட்டியுள்ளது.




தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 2013–14 நிதியாண்டில் சரிசமன் நிலையை அடைந்ததுடன், 2014–15 நிதியாண்டில் நிகர இலாபம் ஈட்டும் நிலையை அடைந்துள்ளது.



## 11. 2013–14 ஆண்டின் செயல்பாடு குறித்த முக்கிய நிகழ்வுகள்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் துவங்கிய காலத்தில் இருந்து முதல் முறையாக 2013–14 நிதியாண்டில், முந்தைய காலகட்டத்தில் ஏற்பட்ட நஷ்டங்களை சரிசெய்து நிகர இலாபம் ஈட்டியுள்ளது. நிறுவனத்தின் வருவாயினை அதிகரிக்கும் நோக்கில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளினால் 01.04.2013 அன்று 62.31 இலட்சம் என்றிருந்த சந்தாதாரர்களின் எண்ணிக்கை, 2013–14 இறுதியில் 65.93 இலட்சம் என உயர்ந்துள்ளது. மேலும், ஒப்பந்தப்புள்ளி மற்றும் விருப்பம் கோரும் விண்ணப்பங்கள் முறையின்படி, 2013–14 நிதியாண்டில், 452 உள்ளூர் தொலைக்காட்சி சேனல்களுக்கு ஒதுக்கீட்டு ஆணை வழங்கியதன் மூலம் வருவாய் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் தமிழகம் முழுவதும் 706 உள்ளூர் தொலைக்காட்சி சேனல்கள் ஒளிபரப்பாகி வருகின்றன. மேலும் இந்நிறுவனம் மாதம் ரூ.15.78 கோடியினை கட்டணச்சேனல்களுக்காக மாத சந்தாவாக, அதாவது ஒரு வருடத்திற்கு ரூ.189.36 கோடி செலுத்தி வந்தது. ஆனால் வருடாந்திர வருவாய் ரூ.163.92 கோடி மட்டுமே இருந்தது. இதனால் வருவாய் மற்றும் செலவுத்தொகைக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டது. இந்த செலவினை குறைக்கும்

நடவடிக்கையாக, கட்டணச்சேனல்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் மூலம், **2013–14** நிதியாண்டில் மொத்தம் ரூ.**38.40** கோடி சேமிப்பு ஈட்டியுள்ளது. இத்தகைய பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் **2013–14** (தணிக்கை செய்யப்படாத நிதிநிலை அறிக்கையின்படி) நிதியாண்டில் ரூ**12.02** கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**முக்கூர் என். சுப்பிரமணியன்**

**தகவல் தொழில்நுட்பவியல்துறை அமைச்சர்**